பல்சுவை
# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

அக்டோபர் 2018





பன்முகத் திறனாளி..

## சாரதா க. சந்தோஷ்

"துப்பாக்கியை எவ்வளவு காலத்திற்குத் தூக்குவது? அதனைத் தூக்கி எறிந்து விட்டு ஆசிரியர் பணிக்கு வந்தேன். அதுவும் சரியாக சோறு போடவில்லை!"

**ஏ.எம்.எம்.அலி**

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும் ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

தோற்றம் 1972

அக்டோபர் 2018



*ஆசிரியர் / வெளியிடுபவர் :*

**அமின் மொஹமெட்**

*இணையாசிரியர் :*

**முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி**

*நிர்வாக ஆசிரியர் :*

**சஃபி மொஹமெட்**

*ஆசிரியர் குழு :*

**ஹிப்ஸுர் ரஹ்மான்**
**நெல்லை உலகம்மாள்**
**வசந்தி ஆதித்தன்**
**கவிஞர் அ.முத்துசாமி**
**கவிஞர் ஈழபாரதி**
**கவிஞர் பாலமுனை பாறூக்**

*ஆலோசகர்கள் :*

**“பைந்தமிழசு“ பாவலர் மா. வரதராசன்**
**கவிதாயினி சக்தி ஜோதி**
**கவிதாயினி அமுதா பொற்கொடி**

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் விமர்சனம், அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப அஞ்சல் தொடர்புகளுக்கு ...

TAMILNENJAM
59, rue des Entrechats, 95800 Cergy - France.

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன.
நூல் விமர்சனத்துக்கு, நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும்.
படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு. செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

## மாற்றமுற வாழலாமே *(இயல் தரவிணைக் கொச்சகக் கலிப்பா)*



மண்ணில் பிறந்திட்ட மானிடரே நன்றென
உண்மைகள் பேசி உலகினில் வாழ்ந்திடுங்கள்
எண்ணங்க ளெல்லாம் இனித்திடும் என்றுமே
வண்ணமாகத் தோன்றுவது வாழ்க்கையு மல்லவே
கண்ணிமைக்கும் போதினில் காணாமல் போகுமே
எண்டிசை போற்றிட இன்பமுடன் நற்செயல்
வண்ணமுறச் செய்தே மனத்தில் பொறாமையும்
மண்ணாசை யும்விட்டு மாற்றமுற வாழலாமே

– நிர்மலா சிவராசசிங்கம்

# கவிதை விழுங்கிய இரவுகள்



தோன்றும் எண்ணங்களை எல்லாம்
கவிதைகளாய் ஊன்றும் முயற்சியிலேயே
கரைந்து போகிறது
நீண்ட இரவுகளெல்லாம்!

பொய் குழைத்து மெய் கலக்கி
மையிருட்டில் மகவொன்று பிரசவமாகிறது
கவிதை எனும் பெயரிலே!
பின் அது இரவுகளை விழுங்கி விட்டு
உறவு கொண்டாடிக் கொண்டிருக்கிறது
உற்பத்தி செய்தவன் உள்ளத்தோடு!

எழுதிய வார்த்தைகளின்
விழுதுகளைப் பற்றிக் கொண்டு
உணர்வுகளுடன் ஊஞ்சலாடிக் கொண்டிருக்கிறது
உறங்கா விழிகளுக்குள் கவிதைகள்!

அடர்ந்த கருமைக்குள்
படர்ந்த கவிதைகள்
படுக்கைகளையும் விழுங்கி
பசியாற்றிக் கொண்டிருக்கிறது!

இன்பத்துப் பாலாக என் இரவுகளை நனைத்து
தெகிட்ட தெகிட்ட இன்னமுதூட்டுகிறது
எனை இம்சிக்கும் இனிய கவிதைகள்!

**கீர்த்தி**



# கருவி

## R.விஜயலட்சுமி

“என்ன ரஞ்சனி உன் தங்கச்சி புதுவீடு கட்டி பால் காச்சுறாளாமா... நீ போகாம இங்க ரேஷங்கடைல நிக்கற” என்று நீட்டி முழக்கிய அஞ்சலை அக்காவிடம்...

“இல்ல, இல்ல... போவல ரேஷன் கடைக்கு வந்ததால உங்களை பாக்க முடிஞ்சுதுக்கா. நாமளே மாசம் ஒருக்காத்தான் பாக்குறோம். அதான் மீனா பால் காய்ச்சிறான்னு தெரிஞ்சும் இங்க வந்திருகேன்” என்று ரஞ்சனி பதிலுக்கு கலாய்த்தாள்.

“அடிப்போடி என்கிட்டேயாவா. ஏண்டி உங்க வூட்ட மதிக்கல, கூப்புடலன்னு உன் மாமியா நான் வாற வழில பஞ்சாயத்து வச்சுச்சு. அதான் கேட்டேன்”

“அது ஒன்னுமில்லக்கா... என் தங்கச்சி மாமியா, மாமனாருக்கும் எனக்கும் ஆவாது. அதான் அத வுடுக்கா பருப்பு நல்ல பருப்பு போடுறாய்ங்களா. இல்ல இந்த மாசமும் சிவப்பு பருப்புதானா குழம்பு விளங்கல”.

“அப்படியா... போயிட்டு போறானுங்க வுடு இந்த மாசமும் கல்கத்தா பருப்புதாண்டி. நான் போறேன் உலை வைக்கனும். இருக்க கியூவ பாத்தா நீ நாளைக்கு தாண்டியம்மா வூட்டுக்கு போவ. உனக்கென்ன உம் மாமியா சமைச்சிடும். எனக்கும் ஒரு மாமியா வாச்சிருக்கா பாரு. குடிக்க தண்ணிக்கூட கைலகொடுக்கணும்”.

ரேஷன் கியூவில் நின்றவாறே நடந்ததை நினைத்து பார்த்தாள் ரஞ்சனி. மீனா பொறக்கும்போது ரஞ்சனி சமைஞ்சுருந்தா. அதனால் ஒரு தாயப்போல மீனாவை குளிக்க வச்சு, சாப்பாடு ஊட்டி... தாலாட்டி, தூங்க வச்சு வளத்ததே ரஞ்சனிதான். பதினாறு வயசு வித்தியாசம்.



ரஞ்சனி அம்மா இரண்டு, பொம்பளபிள்ள ரெண்டு ஆம்பிளை பிள்ளைன்னு நாலு பிள்ளைகளை பெத்துப்போட்டுட்டு வீடு, வீட போயி பேசிட்டு இருப்பா. ரஞ்சனி அப்பா வர நேரம் பொறுப்பான பொண்டாட்டி மாதிரி ரஞ்சனி சமைச்சு வச்சத பரிமாறுவா.

ரஞ்சனிக்கு கீழதான் மத்த மூணு பேரும் பொறந்தாங்க. ஸ்கூல் படிப்பு முடிச்சதும் மேல படிக்க வைக்காம. வீட்டு சமையல், தங்கை, தம்பிகளை வளப்பதே இவளது வேலை. அன்பை மட்டுமே வெளிகாட்ட தெரிந்தவளுக்கு, நல்ல வரன் வரவும் கலியாணம் முடிஞ்சு. பக்கத்து ஊருக்கு போயிட்டா.

மீனாவும் படிச்சு முடிக்க, மாப்பிள்ளை வீட்டிலிருந்து வறாங்க ஒரு எட்டு வந்துட்டு போம்மா என்று அப்பா கூப்பிட ரஞ்சனியும், அவ புருஷன் கௌதமும் பொண்ணையும் பையனையும் மாமியார்கிட்ட விட்டுட்டு போனாங்க.



மாப்பிள்ளை வீட்டிலிருந்து ஒரு 5 பேர் வந்திருந்தாங்க. மீனா ரஞ்சனிய விட கலரா, அழகா இருப்பா. மாப்பிள்ளை அட்டைக்கரி. அவங்க பேசுனதும் ரஞ்சனிக்கு பிடிக்கல.

“பொண்ண ரொம்ப புடிச்சிருக்கு. அடுத்த முகூர்த்தத்துல கல்யாணத்த வச்சுக்குவோம். இன்னைக்கு பாத்த 9 பொண்ணுங்கள்ள மீனாவதான் எங்க பிள்ளைக்கு புடிச்சிருக்காம்' என்று மாப்பிள்ளையின் சித்தி சொல்லவும்...

ரஞ்சனி மனசுக்குள்ள ‘க்கும், உம்புள்ளைய எவக் கட்டுவா?' என்று முணு, முணுத்தவாறே “அம்மா கொஞ்சம் உள்ள வாயேன் என்று அம்மாவை உள்ளே அழைத்தாள் ரஞ்சனி”.

“என்னடி? சொல்லு...”

“அம்மா... இந்த மாப்பிள்ளை வேணாம். கருப்புவேற, வயசும் கூட இருக்கும் போலருக்கு”.

‘அப்படியா சொல்ற. மாப்பிள்ளை வெளிநாட்டுல வேலை பாக்குறாரு' என்று அம்மா கண்களை விரிக்கவும்,

கௌதம், “ரஞ்சனி பேசாம இரு...” என்று ஜாடைக் காட்டினான்.

ஹாலில் இருந்த கூட்டம் ‘சரி இனிமே எதுக்கு வெயிட் பண்ணிக்கிட்டு இப்பவே சாஸ்தரத்துக்கு தட்ட மாத்திக்குவோம். ஓலை எழுதிக்குவோம். கல்யாணத்துக்கு முத நாளே நிச்சயம் வச்சுக்குவோம்' என அடுக்கிக்கொண்டே போச்சு, ஒரு பெரிசு.

“நீங்க என்ன சொல்றீங்க?”

“அது ஒன்னுமில்ல... பெரிய பொண்ணுதான் மாப்பிள்ளை கருப்பா இருக்காரு, வயசுவேற கூட இருக்கும் போலருக்குன்னு சங்கடப்படுது' என்று சொல்லவும், மொத்தக் கூட்டமும் ரஞ்சனியை பாத்த பார்வையில நெருப்பைக் கக்கிற்று.

‘‘என்ன ரஞ்சனி உங்க அம்மாக்கு கொஞ்சம் கூட விவஸ்தையே இல்ல... இப்படி எல்லாருக்கும் முன்னாடி சொன்னா சங்கடப்பட மாட்டாங்க” என்று கௌதம் வருத்தப்பட்டான்.

யார் எது சொல்லியும் எடுபடவில்லை. இந்தப் பொண்ணுதான் வேணும்னு ஒத்தக்கால்ல நின்னு கட்டிக்கிட்டு போனாங்க.

மறுவீடு சம்பிராதயம் முடிஞ்சவுன்ன மீனாவ பார்க்கமுடியல. இருவது நாள் கழிச்சு மாப்பிள்ளையும் வெளிநாடு போக, அந்தக் கூட்டம் மீனாவ கொடுமைப் படுத்த ஆரம்பிடுச்சு.

ஒரு நா ராத்திரி அப்பாவும், அம்மாவும் கண்ணீரும் கம்பலையுமா ரஞ்சனி வீட்டு வாசலில் வந்து நிக்கவும் ரஞ்சனி பதறிட்டா... மீனாவை தாயின் ஸ்தானத்தில் இருந்து வளத்தவளாச்சே.

கௌதமும் வேலைவிஷியமாக வெளியூர் சென்றிருக்கவும், குழந்தைகளை மாமியார் பொறுப்பில் விட்டுவிட்டு, அப்பாவையும், அம்மாவையும் அழைத்துக் கொண்டு கடைசி பஸ்ஸில் ஏரி மீனா வீட்டு வாசலுக்கு போய்ஞ் "கூப்புடுய்யா அந்த பெரிய மனுஷன..."

குடும்பத்தோட வந்து அழுது, புடிச்சு கட்டுனா இந்த பொண்ணத்தான் கட்டுவோம்னு சொல்லி கட்டிட்டு, இங்க வந்து வேலைய காட்டுறீங்களா...? தொலைச்சுப்புடுவேன் தொலச்சு. என் தங்கச்சிக்கு மட்டும் ஏதாவது ஆச்சு குடும்பத்தோட ஜெயிலுக்குத்தான் போகணும். இப்ப நேரா நான் பொம்பள போலிஸ் ஸ்டேஷனுக்குத்தான் போறேன் சொல்லிட்டேன்".

"என்னடி ஓவரா கத்துற... இங்க வந்து இப்படி கத்துனன்னு எம்பிள்ளைக்கு மட்டும் தெரிஞ்சதுன்னா உன் தங்கச்சிய ஒரேயடியா கூட்டிட்டு போவேண்டியதுதான்".

அதச்செய்ங்க முதல்ல. அப்படியே அவள அனுப்பும்போது மகன் வெளிநாட்டுல வேலன்னு சொல்லி வாங்குன 25 பவுன் நகை, வெள்ளி சாமான்லதான் சாமிக்கு பூஜை பண்ணுவோம்னு சொல்லி புடுங்கினது, மத்தசாமான் செட்டோட முதல்ல எங்க பொண்ண அனுப்பி வை. அவ வாழ்ந்தது வரைக்கும் போதும்" என ரஞ்சனி கத்த, அவர்களும் கத்த, தெருவே வேடிக்கைபார்க்க...

ரஞ்சனி மண்ணைவாரி தூத்திவிட்டு, கடைசி வரைக்கும் மீனாவ பாக்க முடியாம, அந்நேரத்துக்கு பஸ்ஸூம் இல்லாம பெரியம்மா வீட்டுக்கு போனாங்க.

அங்க போயும், விடிய, விடிய பேசி... கடைசி முடிவா வெளிநாட்ல இருக்க மாப்பிள்ளைக்கிட்ட நடந்த விஷயத்தை பெரியப்பா சொல்லவும்...

நல்லவேளை பயப்படும்படியா எதுவும் நடக்காம, சரி நான் அப்பா, அம்மாட்ட பேசுறேன் என்று மாப்பிள்ளை சொல்லவும்; 'சீக்கிரமா மீனாவையும் அங்க கூட்டிக்கச் சொல்லுங்க' என ரஞ்சனி சைட்ல பேசினதயும் சொன்னார் பெரியப்பா.

அப்படி ரஞ்சனி கெஞ்ச ஒரு கலகத்துலதான் மாப்பிள்ளை மீனாவ கூட்டிட்டு போனாரு.

மீனா வருஷத்துக்கு ஒரு தடவ ஊருக்கு வருவா. நேரா அம்மா வீட்டுக்கு போவா. அப்பறம்; மாமியார் வீட்டுக்கு போயிட்டு, ஊருக்கு போயிடுவா. வளத்த பாசமாச்சேன்று அம்மா வீட்டுக்கு வந்திருந்த மீனாவ பாக்க குழந்தைகளையும் கூட்டிட்டு ரஞ்சனி அம்மா வீட்டுக்கு போனா.

வீடே மாறியிருந்துச்சு. கலர் டிவி, வாஷிங் மெஷின், பிரிட்ஜ் என்று வீடு முழுவதும் சாமான். ரஞ்சனி அம்மாவுக்கு தலைக்கொள்ளாத பெருமை.

மீனா ரஞ்சனிக்கோ, குழந்தைகளுக்கோ எதுவுமே வாங்கிட்டு வரல. ரஞ்சனி அதைக்கூட பெரிசா நினைக்கல ஆனா வெளிநாட்டிலேயே பொறந்து, வளர்ந்த மாதிரி பந்தா பண்ணிக்கிட்டு, அப்பா, அம்மாவை உக்காந்த இடத்துலேருந்து அதிகாரம் பண்ணிக்கிட்டு முழுசும் மாறியிருந்த மீனாவைப் பார்த்து பரிதாபப்பட்டாள்.

அப்படித்தான் ஒரு நாள் அவங்க அம்மா ஊரிலிருந்து வந்த வசந்தா சித்தி "என்னடி உன் தங்கச்சி புதுசா வீடு கட்டி கிரஹப்பிரவேசம் பண்றாப் போல... உங்கம்மாவ பட்டுக்கண்டாங்கி கடையில பார்த்தேன். ரூ 5000க்கு பட்டுப்புடவை வாங்கிட்டு இருந்துச்சு. என்னா விசேஷம்னு கேட்டேன் சொன்னுச்சு. அப்படியான்னு சந்தோஷம் எட்டிப்பார்க்க அம்மாக்கு போன் செய்தாள். என்னம்மா மீனா புது வீடுகட்டி கிரஹப்பிரவேசம் பண்ணப் போறாளா. என்னைக்கும்மா..." என்று கேட்க.

அதற்கு ரஞ்சனி அம்மா "அது என்னவோ எனக்கு ஒன்னும் தெரியலயே... புதுவீடாஞ் இல்ல வீடு ஒத்திக்கு எடுக்கறாளோன்னு... என்னவோ அப்பாக்குதான் விபரம் தெரியும் நான் என்னத்தக் கண்டேன்" என்று சொல்லி பாதியலே போனை கட் செய்த்தாள் அம்மா.

வெளிவந்த கண்ணீரை அப்படியே அடக்கினாள் இரவு கௌதம் வந்ததும் அவன் தோள்களில் விழுந்து அழுதாள். நடந்ததை சொன்னாள். நான் என்னங்க தப்பு பண்ணேன். அவ புதுபணக்காரியா ஆனா அவளோட. ஆனா எங்க அம்மா, அப்பாக்கூட எங்கிட்ட சொல்ல ஏன்மறுக்கனும். நான் இவங்களுக்கு வேண்டாதவளா ஆயிட்டேன்".

கௌதம் ஆதரவா தலையை வருடி விட்டாள். 'இதுல உன் தப்பு எங்கே இருக்கு? அளவுக்கு மேலே அன்பும், பாசமும் வச்சத தவிர... விடு... அவங்களுக்கு தெரிஞ்சது அவ்வளவுதான்'.

'நான் வளத்த புள்ளைங்க அவ... அவ நல்லாயிருக்கட்டும்னு தான நான் ஆரம்பத்திலேருந்து பாடுபட்டேன். இன்னைக்கு அவளே என்னை மதிக்கல' என்ற ரஞ்சனியை கௌதம் சமாதானப்படுத்தினாள்.

"உன்னை ஒரு கருவியா உங்க அப்பாவும், அம்மாவும், உபயோகப் படுத்திக்கிட்டாங்க. அதனால் அவங்க ஒன்னாயிட்டாங்க... கருவியா இருந்து அவ வாழ்க்கை நல்லாயிருக்கனும் நீ செஞ்சது உன்னை எதிரியாக்கி பிரிச்சிருச்சு"

"நான் நல்லதுதானே செஞ்சேன்... அப்பா அம்மாவே மீனா பிரச்சினையை பேசி முடிச்சிருந்தா ஒரு வேளை உனக்கு இந்த நிலை வராம போயிருக்கலாம் சரி விடு. அன்பை விதச்ச இடத்துல விட்டுட்டு வேற இடத்துல தேடு... மரமா வளந்து உனக்கு நிழல் தரும் அந்த அன்பு'

பையை ஒழுங்கா பிடிம்மா... எங்கேயோ பராக்கு பாக்குற... சீனி கீழக் கொட்டுது பாரு என்ற ரேஷன் கடைக்காரன் குரல் கேட்டு இந்த உலகத்துக்கு வந்தாள் ரஞ்சனி.

■



# காணவில்லை

**அழகிறையைக் கோவிலுக்குள்**
**அகமுருக வணங்கிவந்தால்**
**கழற்றிவிட்ட செருப்புதனைத்**
**காணவில்லை வாசலிலே!**

**மாய்த்திடுவர் நோயென்று**
**மருந்தகம்தான் சென்றுவந்தால்**
**வாய்த்தவுடல் உறுப்பொன்று**
**வயிற்றுக்குள் காணவில்லை!**

**ஆன்மீக அமைதிபெற**
**ஆசிரமம் சென்றுவந்தால்**
**நான்அகந்தை நிற்கையிலே**
**நற்கற்போ காணவில்லை!**

**மகள்காண வில்லையென**
**மனுகொடுக்கச் சென்றபோது**
**தககாவல் நிலையத்துள்**
**தாயவளும் காணவில்லை!**

**ஏக்கமுடன் மக்கள்தாம்**
**ஏங்குகின்றார் காண்பதற்கே**
**வாக்குகளைப் பெற்றுவெற்றி**
**வாய்த்தவனோ காணவில்லை!**

**வழிப்பறியாய் ஆட்சியாளர்**
**வகையின்றிச் சுரண்டுகின்றார்**
**விழித்தெழாத மக்களாலே**
**விளைச்சலெல்லாம் காணவில்லை!**

பாவலர் கருமலைத்தமிழாழன்



# மனம்பறித்த இளவரசி

மடல் ஒன்று எழுதினேன்
மனம் கவர்ந்த
மங்கைக்கு
மடல் போயி சேரலையோ
மருதாணி கைகளுக்கு

மலர் கொய்த
மலையரசி என்
மனம்பறித்த இளவரசி
மறப்பேனா அவளை

மல்லிகை பூவாடை
மணக்கும் இதழ்வாடை
மருதம்போல்
ஓடிவந்து மயக்கும்
கன்னிவாடை

மாந்தோப்பு ஓரத்திலே
மச்சான பார்த்தவளே
மயிலாக குயிலாக
மார்போடு சாய்ந்தவளே

மாந்தளீர் மேனியெங்கும்
மதிஒளிவீசுதடி
மாங்கனிகள் இருவரும்
மகிழச்சியில் ஆடுதடி

மண்வாசனை
உன் வாசனை
கலந்தே வருகுதடி
கிராமத்தென்றலிலே

மடியில் சாய்ந்ததில்
மாராப்பு நழுவியதில்
மன்னிப்பு கேட்டதடி
மாண்போடு மச்சானிடம்

முந்தானை வாசத்தில்
மதயானை சாய்ந்ததடி
மோக தார்சனங்கள்
மெல்லவந்து தேடுதடி

காலம் வந்திடுமோ
கடவுளும்
துணைச்செய்வரோ
காத்திருந்த காதல்
கல்யாணத்தில்
இணைந்திடுமோ

காதல் மலரே
கடிதம் ஒன்று எழுதிவிடு
காதலன் தவமிருக்கேன்
கற்பகமே வந்துவிடு

கவிஞர்
பட்டுக்கோட்டை காதர்



# பேரின்பம்

உன்னழகை பார்த்திருந்தா
ஒருபோதும் பசிக்காது
பெண்ணழகு போல தேன்
பெரும்பாலும் இனிக்காது...!

மொத்தமாய் சுகங்களை
மூடி வைத்த பால் குடமோ - அவள்
முத்தங்கள் உயிர் வளர்க்கும்
மூடாத தேன் குளமா.....!

பெண் இல்லா வாழ்க்கை எல்லா
பிணம் போன்ற பிண்டமடி
பேரின்பம் என்பதெல்லாம்
பெண்ணில் மனிதன் கண்டதடி.....!

உண்மைக் காதல் இல்லைனா
உலகம் சுத்துமா- அதை
உயர்த்தி நானும் பாடுவது
இமயக் குத்தமா....!

மண்ணும் கூட காதலிக்கும்
மகிமை சொல்லவா-அதை
மறுப்பவர் எல்லோரும்
மழலை அல்லவா.....!

**விமலா நாகேஷ்**

# துணைநீயே

உன்ற னுளத்தி லுயிராய்க் கருதியெனை
அன்பா யரவணைத்(து) ஆசையாய்த் தோள்சுமந்தாய் !
கன்ன மிரண்டில் கனிவுடன் முத்தமிட்டாய் !
புன்னகை யோடு பொறுத்தாயென் சேட்டைகளை !
பொன்றாத் துணைநீயே! பூவுலகி லென்றும்நான்
உன்னுள் கலந்த உறவு .

சியாமளா ராஜசேகர்


ஓவியம் ராஜன் ராஜ்

# காட்சிப்பிழைகள்

மலை முகட்டில்
களைத்துறங்கும் கவிதையை யெழுப்பி
றெக்கைகள் கட்டி
பறக்கச் சொல்கிறாள் முதுமைக்காரி
பறக்க நான் பறவையல்ல என்ற
வார்த்தைகள் உதிரும் முன்பே ,
தள்ளிவிடுகிறாள், அந்தச் சதிகாரி
உயிரின் பயத்தில்
அசைத்த அசைவுகளில்,
உயரே எழும்புகிறது தேகம் !
பறந்து பார்ப்போம்... பறத்தலை
நகர்த்துகிறேன் ,

காட்சி : 1

உதிரம் குடிக்கும்
செந்நாய்களின் விரட்டலில்
அரிமாவிடம்
அடைக்கலம் கேட்கும் ஆடுகள்
ஆடுகளின் காப்பகத்திற்கு
காவல் காக்கும் ஓ நாய்கள்

காட்சி : 2

தேசத்தை விற்பவர்களின்
கைகளில் தேசியக் கொடி
கவிதைக் காரர்களின்
வீதியில் காதல் கொடி
தாகமெடுத்த சிட்டுக் குருவிகளுக்கு
சொட்டு நீர்ப் பாசனம்
சிட்டுக் குருவிகளின்
உதிரத்துளிகளில் தாகம் தீர்க்கும்
கொன்றுண்ணிப் பறவைகள்

காட்சி : 3

பிணத்தைத் தூக்கிச் செல்லும் பிணத்தை
வேடிக்கை பார்க்கும் பிணங்கள்,
சுடுகாடுகளில் சாதிய வர்ணங்கள்,
இடுகாடுகளில் காட்சிப் பிழைகள் ,
மண் அரிக்கும் புழுக்கள்
அறியாமல் அரிக்கிறது யாக்கைகளை

காட்சி : 4

கான்கிரீட் காடுகளில்
பறந்து போகும் கருப்பு மேகங்களினிடை
முக்காடு போட்டு
பறந்து போன பறவைகள்
மூச்சுத் திணறி வீழ்ந்த இடத்தில்,
சிதறிக் கிடக்கின்றது மனிதப் பிணங்கள்

திரும்புதல் :

மயங்கி விழுந்த இடத்தில்
இறக்கைகளைக் கழற்றிக்
கொண்டிருந்தவள்
விழித்த கவிதையைப் பார்த்து
காதல் வார்த்தைகள் காத்திருக்கின்றது
எழுதப் போ ! யென்று,
எள்ளி நகைக்கிறாள் ,
நீ, யாரெனக் கேட்டாள்
பொலிவிழந்த தேசியமென்று
சொல்லிவிட்டு பறக்கிறாள் ,

கவிதையின் கண்களில் கண்ணீர் வழிய ,
உதடுகளின் வழியே
கோரைப் பற்கள் நீள்கின்றன
அக்கினி சுவாலைகள் சுற்றியே வந்தும்
பற்றியெரியாமல் பறக்கிறது கவிதை !


**முகமது பாட்சா**

“துப்பாக்கியை எவ்வளவு காலத்திற்குத் தூக்குவது? அதனைத் தூக்கி எறிந்து விட்டு ஆசிரியர் பணிக்கு வந்தேன். அதுவும் சரியாக சோறு போடவில்லை!”

**இலங்கையின் தமிழ் இலக்கியப் பரப்பில் முன்னணிக் கவிஞர்களில் ஒருவராக அடையாளப்படுத்தப்பட்டிருப்பவர் கவிஞர். ஏ. எம். எம் அலி. திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியாவில் பிறந்து, வாழ்ந்து வருகின்ற கவிஞர் நாலரைத் தசாப்த கால இலக்கிய அனுபவமுடையவர். மரபுவழிப் புலமை நிரம்பப் பெற்றிருக்கின்ற கவிஞர் மரபுக்கவிதைகளோடு, சிறுகதைகள், புதுக்கவிதைகளையும் தருபவர். இலக்கியக் கட்டுரைகள் மூலமும், ஆய்வுகள் மூலமும் பேசப்படும் கவிஞர் ஏ.எம்.எம்.அலி அவர்களை தமிழ் நெஞ்சத்திற்காக நேர்கண்டோம்.**

*நேர்காணல்:*

**பாவேந்தல் பாலமுனை பாறூக்**



தந்தையார் அப்துல் மஜீத் தாயார் மீரா உம்மா இருவரும் இணைந்து நடத்திய இல்லற வாழ்வின் இரண்டாவது அடையாளச் சின்னமாக கிண்ணியா எனும் ஊரில் பிறந்து. முகம்மது அலி எனும் பெற்றோர் இட்ட பெயருடன் வளர்ந்தவன்

எல்லாப் பிள்ளைகளையும் போல நானும் கல்வி கற்கப் பள்ளிக் கூடம் போனவன்தான். ஆனால் ‘கல்வி கரையில கற்பவர் நாள்சில’ என்ற கூற்றின் பிரகாரம் கரையிலாக் கல்விக் கடலில் ஆழ மூழ்கி முத்தெடுக்க முடியாது போனவன்! ஆயினும் க.பொ.த (உயர்தரம்) வரை கற்ற மாணவன். பாடசாலைக் கல்வி அவ்வளவுதான். பட்டறிவுக் கல்வி அதற்குமேல் என்கிறார் கவிஞர் ஏ.எம்.எம். அலி.

மேலும் தொடர்ந்து... இந்தக் கல்விக்கு ஓராசிரியர் ஆகவோ, ஓரெழுது வினைஞராகவோ வந்திருக்கலாம் அன்றும் இன்றுபோல் அரசியல் செல்வாக்குத் தேவைப்பட்டது. நானோ அதுவற்று இருந்தபடியால் வாத்தியாராக வருவதற்குரிய வாய்ப்பை இழந்தேன். ஆனால் ஆகாயப் படைவீரனாக வந்தேன் என்கிறார்.



துப்பாக்கியை எவ்வளவு காலத்திற்குத் தூக்குவது? அதனைத் தூக்கி எறிந்து விட்டு பின்னாளில் DELIC என்னும் திட்டத்தின்கீழ் ஆங்கில ஆசிரியர் பயிற்சியை மேற்கொண்டு ஆங்கில ஆசிரியராக நியமனம் பெற்று, இல்லாளும், பிள்ளைகளும் சந்தோஷப்படுமளவுக்குச் சம்பளம் போதாதக் காரணத்தால், அந்த உத்தியோகத்தையும் கைகழுவி விட்டு மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களினதும் அவருக்கும் மேலான அல்லாஹ்வின் அருளினாலும் இலங்கைத் துறைமுக அதிகார சபையில் 1996ஆம் ஆண்டு இணைந்து, 2008 வரை பணியாற்றி இளைப்பாறிய கவிஞர் ஏ.எம்.எம். அலி அவர்களிடம் நமது உரையாடல் தொடர்ந்தது.

## இலக்கியத்தில் எப்படி தங்களுக்கு ஆர்வம் ஏற்பட்டது?

எனக்கும் கவிதைக்கும் அப்போது உறவு ஏற்பட்டிருக்க வில்லை. நான் க.பொ.த. (சா) கற்கும் போது படிக்கக் கிடைத்த நூலொன்று கவிதைக்கும் எனக்கு மிடையேகாதலைத் தோற்றுவித்தது. அந்நூல் தமிழ் இலக்கியம் 'ஆ' பாடத்திட்டத்தில் இணைக்கப்பட்டிருந்த நூலாகும்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த சாரணபாஸ்கரனார் என்னும் புனைப்பெயர் கொண்ட கவிஞர்த் திலகம் அப்துல் ஹமீது என்பவரால் எழுதப்பட்ட"யூசுப் சுலைஹா" என்னும் காவிய நூலே. அது மிகச்சிறந்த காவியநூல். மணி மணியான மரபுப்பாக்களால் இயற்றப் பட்டிருந்தது. பிற்காலத்தில் நான் மரபுப் பாக்கள் பற்றி அறிந்து தெளிந்த பின்னர், அந்நூலைப் படித்துச் சுவைக்கத் தேடினேன். கிட்டவில்லை. என்னைக் கவிதையின்பால் ஈர்த்தெடுத்துக் கவிஞனாக்கியதில் கணிசமான பங்கு அந்நூலுக்குண்டென்பேன்.

## எழுதத்தூண்டியவர் யார்? முதற் படைப்பு எங்கே அறிமுகமானது?

எனது கவிதைகளுக்குக் களம் தந்து என்னை ஊக்குவித்தவர் பத்திரிகை ஜாம்பவான் சிந்தாமணி, தினபதி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் எஸ்.டீ. சிவநாயகம்அவர்களே.அன்னாருடன்இணையாசிரியர் இராஜ அரியரத்தினம், இணையாசிரியர் ஈழவாணன் போன்றோரும் என்கவிதைப் பயணத்திற்கு உதவி நல்கியவர்களாவர்.

எனது முதற் கவிதை 1974 ஆம் ஆண்டு 'விவசாயியின் குரல்' என்னும் மகுடத்தில் தினகரன் வார மஞ்சரியில் வெளி வந்தது. 1970 களிலிருந்து எனது கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் அனைத்துக்கும் களந்து உற்சாகப் படுத்திய அச்சூடகங்கள் எனின் இடையிலே நின்றுபோன சிந்தாமணியும், தினபதியும் அத்துடன் இன்றுவரையும் களந்தந்து கொண்டிருக்கும் தினகரன், வீரகேசரி, தினக்குரல், சுடரொளி போன்ற தினசரிகளையுஞ் சொல்லலாம். மற்றும் மாதாமாதம் வெளிவரும் ஞானம், ஜீவநதி போன்ற சஞ்சிகைகளும் எனது ஆக்கங்களுக்கு களந்தரும் ஏடுகளாகும்.

## மரபு, புதுக்கவிதை என்பன தொடர்பான உங்கள் கருத்துக்கள், இப்போது வெளிவரும் புதுக்கவிதைகள், முகநூற் கவிதைகள் பற்றியதான உங்கள் பார்வை எப்படி?

இப்போது கவிதை உலகை ஆட்சி செய்ய வந்திருப்பது புதுக்கவிதைதான். ஆயினும், இவ்விருவகைக் கவிதைகளையும் ஒப்பிட்டுப் பார்த்து இப்படிச் சொல்லியுள்ளார் கவிஞர் வாலி.

**''மரபுக் கவிதை அறுபுக் குதிரை மற்றக் கவிதை மட்டக் குதிரை''**

மரபுக்கு உயிர் இருக்கிறது. மற்றதுக்கு உயிர் இல்லை. என்பது உட்பொருளாகும். அவரது கூற்று எப்பொருளைக் கொண்டிருப்பினும் புதுக்கவிதை எழுச்சி பெற்றுள்ளதை மறுக்க வியலாது. அக்கவிதையின் வடிவமும் சொல்லும் முறையும் அழகியல் அம்சமும் சேர்ந்து தமிழ் மொழியைப் போஷிக்க வந்த புறோட்டீன் என்று பெயர் வைக்கலாம்.

கவிதைகளால் ஆனதுதான் தமிழ்மொழி! அதுவும் மரபுக் கவிதைகளால் ஆனமொழி அந்த மொழி! காலத்திற்குக் காலம் ஆடை அணிகளில் மோஸ்தர் மாறுவது போல் அல்லாது தமிழ் மொழியிலுள்ள மரபு மாறப் போவதில்லை. ஆதலால், உரைநடைக்கு முற்பட்டதான மரபுக் கவிதை தமிழ்மொழி அமர்ந்தாட்சி செய்யும் அரியாசனம் ஆயிற்று. அதன் அருகில் நின்று சாமரம் வீசுபவைதான் புதுக்கவிதைகள்!

அது வாகடமாக இருந்தாலும் சரி இதிகாசக் கதைகளாக இருந்தாலும் சரி அனைத்து நூற்களும் மரபுக் கவிதைளால் ஆனவையாம் என்பார் ஆன்றோர்.. ஆகவே, மரபை விட்டால் தமிழுமில்லை! தமிழை விட்டு மரபு நீங்கப் போவது மில்லை! ஆக பண்டைய மரபும் இன்றைய புதுசும் தமிழ் மொழிக்கு நாம் சூட்டும் பூடணங்களே!

இப்படியும் ஒரு புது மொழி சொல்லலாம். அதாவது மாலை தீவு மாசி போல் கடிக்கக் கடினமாக இருந்த மரபை இலங்கை மாசி போல் இலகுபடுத்தினான் பாரதி என்னும் புதுமைக் கவிஞன்.

அவன் படிக்கக் கடினமாகக் கிடந்த பனுவலை புதுசாக்கிப்பருகத் தந்த பைனியர்!

அவனுக்குப் பின்னரான மரபுக் கவிதைகளும் புதுப்புது வடிவங்களைப் பெறலாயின. புதுக் கவிதைகள் நான்கு படித்தரங்களை அடைந்து விட்டன. வசனக் கவிதை, புதுக்கவிதை, நவீனக் கவிதை, பின் நவீனக்கவிதை இவ்வண்ணம் புதுக்கவிதை கண்ட பரிமாணம் தமிழ்மொழியைப் பரிமளிக்கச் செய்துள்ளது. புதுக்கவிதை கவிஞர் வாலி சொன்ன மாதிரி உயிரற்ற மட்டக் குதிரையும் ஆகலாம். அதன் ஜீவனும் ஜீவகளையும் பேணப்படாவிட்டால் அவர் கூற்றுச் சரியாகிவிடும்.

ஆனால், புதுக்கவிதை அந்நிலையை அடையாது என்பதற்கு எடுத்துக் காட்டாக எத்தனையோ புதுக்கவிதைகள் எழுதப்பட்டு விட்டன. வரதட்சணைக் கொடுமை பற்றி கவிக்கோ அப்துல் ரஹ்மான் எழுதிய ஒரு புதுக்கவிதை...

“வீட்டுக்கு வந்த மருமகள்
விளக்கை எரித்தாள்
வீட்டுக்காரர்களுக்கு
வெளிச்சம் கிடைக்கவில்லை
அடுப்பை எரித்தாள்
வீட்டுக்காரர்களுக்குப்
பசி தணியவில்லை
அவளே எரிந்தாள்
வெளிச்சமும் கிடைத்தது
பசியும் தணிந்தது.”

வரதட்சணைக் கொடுமையைப் படம் பிடித்துக் காட்டுவதற்கு இதைவிட்டு பிறிதொரு கவிதை தேவையில்லை. இதே வேளை நான்கு அடிகளில் அமைந்த சொற்செட்டுக்கள் கூடிக்குறையாமல் ஓரசையேனும் அதிகரிக்காமல் தேசிய விநாயகம் பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட அழகிய மரபுக் கவிதை...

“வெய்யிற் கேற்ற நிழலுண்டு
வீசுந் தென்றற் காற்றுண்டு
கையிற் கம்பன் கவியுண்டு
கரும்பை நிகர்த்த சுவையுண்டு”

ஆகவே, தமிழ் மொழிக்கு அணிவிக்கப் பட்ட அழகிய அணிகலன்தான் மரபுக் கவிதை.

அம்மொழியை மேலும் அழகுபடுத்தும் பொருட்டு அணிவிக்கப் பட்ட அழகிய அணிகலன்தான் புதுக்கவிதை.

முகநூல்விரிந்தகளமாயிற்று. அதனால், இப்போது பலபேர் கவிதை எழுதத் தொடங்கியுள்ளனர். தமது காத்திரமான கவிதைகளால் முகநூல் வாசகர்களைக் கட்டிப் போடுபவர்களாகவும் உள்ளனர். காத்திரமற்ற கவிதைகளும் எழுதப் படாமல் இல்லை.

எது எப்படியாயினும், முகநூல் நல்ல



கவிஞர்களை அறிமுகஞ் செய்யாமலும் இல்லை.

'பழைய மரபுக் கவிதையிலிருந்து உருவம், உள்ளடக்கம் ஆகிய இரண்டிலும் பல்வேறு வகையில் மாறுபட்டது என்ற பொருளில்தான் புதுக்கவிதை என்ற பெயர் சூட்டப்பட்டது. ஆனால், வேரூன்ற மரபு நிலமில்லாது புதுமை வளர்ந்து கிளை பரப்ப இயலாது'

**நூல் வெளியிடுவதில் இலங்கையைப் பொறுத்த வரை உங்களுக்கான சிரமங்கள்?**

நான் எழுத ஆரம்பித்த 1974ஆம் ஆண்டிலிருந்து 2018ஆம் ஆண்டு வரைக்குமான காலை எல்லைக்குள் மூன்று நூற்களை வெளியிட்டுள்ளேன்.

**குடையும் அடைமழையும்**
*(கவிதைத் தொகுப்பு 2005)*

**ஒரு தென்னை மரம்**
*(சிறுகதைத் தொகுப்பு 2011)*

**ஒரு திராட்சைக் கொடி தேம்பி அழுகிறது**
*(கவிதைத் தொகுப்பு 2016)*

எழுத்துக்களைத் தொகுத்து நூலாக்கி வெளியிடும் வரைக்குமுள்ள சிரமங்கள், செலவுகளை அறிந்திருப்பீர்கள். யானைப் பசிக்குச் சோளப் பொரி போலத்தான் இலங்கையிலுள்ள வெளியீட்டு வசதிகள். வெளியீட்டு விழா, நூல் விற்பனை என்று வரும்போது எதிர்கொள்ளும் சலிப்பும் அலுப்பும், அழைப்பிதழ் அனுப்பியும் கொண்டு சென்று கொடுத்தும் அன்பர்களின் வரவைப் பார்க்கும் போதெழும் கொதிப்பும் கூடத்தான்! இத்தியாதிப் பின்புலத்தோடுதான் தமது ஆக்கங்களை நூலாக்கித் தரும் பணியில் பெரும் நோக்காடு அடைகின்றனர் எழுத்தாளர், கவிஞர் எனப்படுவோர்!

**இலங்கையைப் பொறுத்தவரை இலக்கியப் படைப்புக்களுக்கு வழங்கப் படும் விருதுகள் தொடர்பான உங்கள் கருத்து?**

தகைமைகள் அறிந்து விருதுகள் வழங்கும் போது தான் விருதுகளுக்கும் அவற்றைப் பெறுவர்களுக்கும் மதிப்பும் மரியாதையும் கிடைக்கும். ஆனால், தற்போது காசுக்குக் கொள்வனவு செய்யப்படும் அளவுக்கு விருதுகள் அதிகரித்து விட்டன! பணத்திற்கு விருதுகள் வழங்குவதற்கென்றே சிலர் கழகங்களை அமைத்துக் கொண்டு இயங்குகின்றனர். எப்படியேனும் விருதொன்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்கின்ற அவாக் கொண்டோருக்கு காசுக்கேற்றபடி இந்த அமைப்புகள் வழங்கும் பட்டங்கள் அனந்தம்!

மற்றது, இலங்கை அரசின் கலாசாரத்



திணைக்களம் வழங்கும் 'கலாபூஷண' விருது. இவ்விருதும் கடைச் சரக்குப் போல மலிந்து போய் விட்டது.! வருடா வருடம் இந்த விருதும் வாரி வழங்கப் படுகிறது! புறுடா ஆவணங்கள் சமர்பித்தல், பின்கதவால் செல்லல், தாம் சார்ந்த துறையில் பட்டும் படாமலும் இருந்து விட்டுப் பட்டம் பெற ஓடிவரல் இவை போன்ற போலித்தனம் மிகுந்த செயலர்களால் கலாபூஷண விருது பொருளற்றுப் போய் விட்டது!



என்னைப் பொறுத்தவரையில் நான் சொல்வேன் இப்படி அள்ளு கொள்ளையாக பட்டங்கள், விருதுகள் வழங்குவதை நிறுத்தி, மிகச் சரியானவர்களின் தார தம்மியங்களை நிறுத்துப் பட்டமளித்துக் கௌரவித்தலிலேதான் அப்பட்டங்களுக்குரிய சிறப்பும் மதிப்பும் தங்கியுள்ளது என்பேன்.

காசுக்கும் பட்டங்கள் விருதுகள் வாங்கலாம் என்னும் நிலைமை வரும்போது நாம் நேசிக்கும் மொழிக்கும் இலக்கியத்திற்கும் நம்முடைய எழுத்திற்கும் பேரிழுக்கு. ஆகவே, பேருக்குப் பட்டம் பெறுவதை, அதற்காக ஆலாய்ப் பறப்பதை, இல்லாத ஆவணங்களைத் திரட்டுவதை, எல்லாம் விடுத்துப் பட்டம் பெறுவதற்கான தகைமைகள் பெருக்கிப் பட்டந் தரித்தலே பெருமை என்பேன்.

## ஹைக்கூ, குறும்பா போன்ற புதிய வடிவங்கள் மொழியைச் செழுமைப் படுத்த வல்லதா?

இவ்விருபாவடிவங்களும்அந்நியமொழியாகிய ஜப்பான் மொழியிலிருந்து ஹைக்கூவும் ஆங்கிலத் தில் இருந்து குறும்பாவும் தமிழுக்குள் வந்ததாகச் சொல்லப் படுகின்றது. புதுக்கவிதை தோன்றி எப்படி தமிழ் இலக்கியத்திற்குப் புத்தெழுச்சியைத் தந்ததோ அவ்வாறே ஹைக்கூவும், குறும்பாவும் தமிழ் மொழியின் செழுமைக்கும் சிறப்புக்கும் கவிதை வளத்திற்கும் பங்களிப்புச் செய்ய வந்த பாவடிங்கள் தாம்.

ஆயினும், இந்த இரண்டு வகைப் பாக்களில் ஹைக்கூ எழுதப்படும் அளவில் குறும்பா எழுதப் படுவதில்லை என்றுதான் கூற வேண்டும். தமிழில் குறும்பாவை அறிமுகப் படுத்திய மகாகவி து. உருத்திர மூர்த்திக்குப் பின்னர் ஒலுவில் எஸ். ஜலால்தீன், ஜே.வஹாப்தீன் போன்றோரும் எழுதினர். பாவேந்தல் பாலமுனை பாறூக் குறும்பா எழுதியவர்களுள் குறிப்பிடத் தக்கவர். இவர் நூறு குறும்பாக்களைத் தொகுத்தெடுத்து 'பாவேந்தல் பாலமுனை பாறூக் குறும்பாக்கள்' என்றொரு குறும்பா நூலை 2013ஆம் ஆண்டில் வெளியிட்டார்.

தமிழுக்குத் தரப்பட்ட புதுப்பா வடிவமாகிய ஹைக்கூ வை செம்மொழிக்கு அறிமுகஞ் செய்தவர் கவிக்கோ அப்துல் ரகுமான். எழில்கொண்ட பெண்ணுக்கு ஏன் எதற்கு அழகு சாதனங்கள். அவளுக்கமைந்த இயற்கை அழகொன்றே போதாதா? எனினும் அவளது அழகை மேம்படுத்திக் காட்ட இந்த அழகு சாதனங்கள் உபயோகம் ஆவது போல நமது மொழியைச் சிறப்புச் செய்ய இவ்விரு பாவடிவங்களும் எமது மொழியோடு இணைந்து கொண்டன.

# அடங்காத ஆகாசம்

பெண்ணியம் செல்வக்குமாரி



ஏதேதோ யோசனை வள்ளிக்கு. சாமிக்கண்ணு செத்து இதோட பதினைஞ்சு நாளாச்சி. நாளக்கி கருமாதி. அதுக்குள்ள மருமவளுக நீயா நானான்னு போட்டி போடுறாளுவ. மாமியாருக்கு இராத்திரி பொடவ போடனும். ஒப்பாரிக்கு ஆள ரெடி பண்ணனும்னு இல்லாத சண்டபோட்டுகிறாளுக.

“சரிங்க பொண்டுகளா, ஆனது ஆச்சி, போனது போச்சி. போனவர் போனாரு.. அவருடைய ஆத்மா சாந்தியடைய, யாரும் சண்டகிண்ட போடக்கூடாது. என் வூட்டுக்காரருக்கும் கொழுந்தனுக்கும் சோறு போட்டுட்டு ஓடியாந்திடறேன். என்ன” சொல்லியபடி கருமாதிவூடு தாண்டி, வள்ளி தன் வீடு நோக்கி நடந்தபோது தன் மாமனார் சாகக்கிடக்கையில் நடந்தது ஞாபகத்துக்கு வந்தது. “யம்மா வள்ளி, என்புள்ளய பத்தரமா பாத்துக்கம்மா” என்று சொல்றப்பவே அவர் உசிரு பிரிஞ்சது. அத நெனச்சா இப்பவும் வள்ளிக்கி கண்கலங்கும்.

வீட்டுக்குப் போயி, சொச்சமிச்ச வேலைகள பாத்திட்டு மீண்டும் இராத்திரி வரணும். இப்பவே மணி ஒம்பதாச்சு, ஒரு பதினோரு மணிக்கி போனாக்கூட விடிய விடிய கண்முழிக்கனும், தாலியறுக்கறது மொதகொண்டு, பொடவ போடறதுன்னு எல்லாத்திலயும் வள்ளிதான் கலந்துட்டு செய்யனும். இவ போலன்னாலும் ஆளு வந்து கூப்புடும்.

வள்ளியோட பொறந்த ஊர் இராயபுரம். பட்டணத்தில் வாழ்ந்தவதான். வாக்கப்பட்டு வந்த ஊரு பொம்மையார்பாளையம். புதுச்சேரி பக்கத்துலதான் இருக்கு. மெட்ராசு போய் வருவது இவளுக்குத் தண்ணிப்பட்ட பாடு. எப்படித்தான் இவளால அந்த ஊருக்குப்போயிட்டு

அலுப்பில்லாம வர முடியுதோன்னு கேக்கத்தான் செய்வாங்க. எதுக்கும் அலுத்துக்காதவளுக்கு அலுப்பு எப்படி வரும்.

இந்த இருபத்து நாலு வருசத்துல, அவ எல்லார்க்கும் பரோபகாரியா வாழ்ந்திருக்கா. அவ வாக்கப்பட்டு வந்ததிலிருந்து பெரியவங்க சின்னவங்கன்னு எல்லாரும் ''வள்ளிக்கா, வள்ளிக்கா" ன்னு கூப்டுவாங்க. அந்த அளவுக்கு அவளுக்குப்பேரு. எந்தக் குடும்பத்து விசேடமா இருந்தாலும் தன் குடும்ப விசேடமா அள்ளிப் போட்டுகிட்டு செய்வா. வள்ளிக்கா வந்துட்டாலே பாதி வேல முடிஞ்சாப்லதான்.

வள்ளி, எப்படியிருப்பா? அவ செவப்பா, இல்ல கருப்பா இருப்பாளா? சீவி சிங்காரிச்சி சின்னப்பொண்ணு மாதிரி இருப்பாளா? யாரப்பாத்தாலும் அந்த ஊர்ல எதுக்கெடுத்தாலும் வள்ளிக்கான்னு கூப்டுன்றாங்களே எப்படி? அப்படின்னா என்ன அர்த்தம்? வள்ளிய அக்கான்னு கூப்புட்டு கூப்புட்டு அப்படிச் சுருங்கிப் போச்சி. வள்ளிக்கா தலகுளிச்சிட்டு மஞ்ச பூசிகிட்டு, அகலமுகத்துல சிவப்பு பொட்டு வச்சிக்கிட்டுத் தெருவுல நடந்தாள்னா அந்த மாரியம்மனே நடந்துவறாப்லதான் இருக்கும். இத்தனிக்கும் பத்தாவதுதான் படிச்சவ. சென்னைல வாழ்ந்தாலும் இத்தினி சின்ன வயசுலயே அவ வாக்கப்பட்டு வரும்போது பதினாறு வயசு. தான் குடும்ப நெலமயப் புரிஞ்சிகிட்டு, வந்த வருசமே மீன்கூடய தலயிலே சுமந்தா. இந்த ஐம்பது வயசுலயும் கூடய இன்னமும் கீழே இறக்கல. இத்தனைக்கும் தன் குடும்பம் தன் கொழுந்தங் குடும்பம் எல்லாத்தயும் தானே வழி நடத்துனவ.

இதுவரைக்கும் எந்த பஞ்சாயத்தும் இல்ல அவ குடும்பத்துல. ஆனா எத்தினியோ குடும்பத்துக்கு எழுதப்படாத பஞ்சாயத்துக்காரி ஆயிட்டா. சொல்லுவாங்க, மெட்ராசுகாரின்னா வாயி அதிகமாக நீளும்னு. இவளுக்கும் சில நேரங்கள்ள கை நீளும். எந்த ஆம்படையானாவது குடிச்சிட்டு வந்து பொண்டாட்டிய அடிச்சானுவனா, ஆம்பளனும் பாக்காம ஒதச்சித் தள்ளிடுவா. சுத்தி வேடிக்க பாக்கற ஆம்பளையோ பொம்பளையோ இத தப்புன்னு சொல்ல மாட்டாங்க. இவ ஒரு காரியம் செஞ்சா அதில் ஒரு நாயம் இருக்கும்னு தெரியும். அத்தனை கட்டுச்சிட்டா குடும்பம்

# ஹைக்கூ

●
**நிலவை**
**தொட்டுத் திரும்புகிறது**
**நீரில் வாளி**
●
**குழந்தையின் கிறுக்கல்**
**ஆங்காங்கு புள்ளிகள் வைக்கிறது**
**தூறல் மழை.**
●
**மரம் தேடும்**
**விறகு வெட்டியவளுக்கு கிடைக்கவில்லை**
**ஒரு மறைவிடம்..**
●
**மருத்துவரிடம் செல்ல**
**சாவியை எடுத்துத் தருகிறாள்**
**உடைந்த பொம்மையுடன் மகள்.**
●
**உறங்கும் குழந்தை**
**படுக்கை இடமாற்றுவதை**
**கண்காணிக்கிறது பஞ்சுபொம்மை.**
●
**காற்று புகாத அறை**
**கட்டிலின் மேல் ஏகப்பட்ட**
**பலூன்கள்.**
●
**திரளும் மேகங்கள்**
**புகைப்படம் எடுப்பதற்குள்**
**மின்னல்.**
●
**மலை உச்சி**
**திணறியபடி செல்லும் லாரியில்**
**கற்கள்.**
●
**பழைய ஓவியம்**
**மேலும் மெருகூட்ட**
**திரையில் கிழிசல்.**

**பானால். சாயிராம்.**
**தஞ்சாவூர்.**

நடத்துறவ. யாருக்கு என்ன உதவினாலும் ஓடிப்போய் உதவுவா, மனசலிப்பே வராது அவளுக்கு. கூட்டுக்குடும்பத்துல நல்ல காரியமோ கெட்டகாரியமோ நடக்கும் போது சண்டச்சச்சரவு வரும். இவ வந்துட்டான்னா எப்படித்தான் முடியும்னு யாருக்கும் தெரியாது.

பல விசயங்கள யோசிச்சபடியே அவள் வீட்டுகுள்ள நொழஞ்சா. இதுவரக்கும் கத்துனவன் வாயி சட்னு மூடிகிச்சி. வேற யாருமில்லே. அவ புருசந்தான். சாயங்காலம் ஆனதும் சாப்புடறானோ இல்லியோ சாராயக்கடைக்குப் போயிட்டு வந்தாதான் அவனுக்குச் சோறு எறங்கும். கடல் வேலக்கிப் போறானோ இல்லியோ, சாயங்காலமானா பாஞ்சிரூபா வாங்கிக்கின்னு கௌம்பிடுவான். இவ ஊட்டுக்குள்ள போனதும் மூஞ்ச உர்ருனு வச்சிகிட்டு ஒக்காந்திருந்தான்.

“ஏங்க, தம்பி எங்க?”

“நான் என்ன கோவணத்துலயா முடிஞ்சி வச்சிக்கறேன்”

“அட, எங்க போயிருக்குனு கேட்டதுக்கு, என்ன இது சலிப்பு”

“பின்ன அந்த நாயி எங்க போனா எனக்கென்னா” ஏதோ ரெண்டுபேருக்குள்ள நடந்திருக்குன்னு புரியாதவளா வள்ளி.

“சரி, சரி சோறு போடறேன். சாப்டு தூங்கு. மறிபடியும் கருமாதி வூட்டுக்குப் போகனும்” தட்டுல சோத்தயும் டம்ளர்ல தண்ணியும் கொண்டாந்து வச்சா வள்ளி.

முணுமுணுத்தபடி சாப்டான். இந்த கொழுந்தன் தம்பி எங்க போச்சி, இத்தன நேரத்துக்கும் சாப்டாம இருக்காதே என்று எண்ணியபடி, தன் புருசன் சாப்புடற வரைக்கும் அங்கயே உக்காந்து யோசனைல ஆழ்ந்தாள். இரண்டாயிரத்துநாலுல்ல சுனாமி வந்து மீனவ உயிர்கள நொடியில பறிச்சிகிட்டுப் போனப்பதான், தன் மவளுக ரெண்டு பேரையும் தன் கொழுந்தனாரு மகளுக மூணுபேரயும் சேர்த்து அழிச்சிட்டுப் போச்சி அந்தக் கருப்புதின சுனாமி. அப்பதான் கொழுந்தன் பொண்டாட்டியும் காணாமலே போயிட்டா. செத்து காணா பொணமா ஆயிட்டாளோ, கடலம்மா முழுங்கிட்டாளோ, அந்த நாளேர்ந்து இந்த நாள் வரைக்கும் புள்ளக்கிக்கிப் புள்ளயா கெடக்கறான். வேற பொண்டாட்டி கட்டிக்காம அப்படியே இருந்துட்டான். ஆனா, கூடிய தன் பொண்டாட்டியாக்கிட்டான். வலக்கிப் போவான், வருவான், குடிக்கப் போவான் வருவான். அவ்ளோதான் அவன் வாழ்க்க. ஒரே வீடுதான், அந்த வூட்டத்தான் மாமனார் எறந்த பொறகு, பாதியா பிரிச்சிட்டாங்க. பிரிச்சாலும் அண்ணந்தம்பி கொழந்தைங்க ஒன்னாவெளயாடும், ஒன்னா சாப்டும், ஒன்னா தூங்கும். எந்த வேத்துமயும் கெடயாது. மீன் வித்துட்டு வரப்ப மீன்கூடையில பழம், ரொட்டி, இனிப்பு என வகையா வாங்கிவரவ எல்லாக் கொழந்தங்களுக்கும் சமமா பிரிச்சித் தருவா. இவளத்தான் சின்னவன் பொண்ணுங்களும் அம்மான்னு கூப்புடுங்க. பெரியப்பன் குடிச்சிட்டு வந்துட்டானா ஓங்கிக் கொரல் கொடுத்து கூத்துப் பாட்டு பாடுவான். சுத்தி கொழந்தங்க உக்காந்து பாட்ட கேக்கும். மழ காலங்கள்ல இடி இடிக்கும்போது அர்ச்சுனா அபயம்னு சொல்லிக் கொடுப்பான். வீட்டு ஓரமா சுடச்சுட மண்ணு எடுத்தாந்து சட்டில போட்டு சோளம் பொரிச்சிக் கொடுப்பா.

இன்னிக்கும் அதே மாதிரிதான் குடிச்சிட்டு வந்திருந்தான். இப்பலாம் வாய் தொறந்து பேசறதில்லே. குடிச்சிட்டா கம்முனு டிவி பாத்துட்டு, சாப்ட்டு எட்டு மணிக்கே தூங்க போயிடுவான். இன்னிக்கி மணி ஒம்பதாகியும் சாப்டாம உக்காந்திருந்திருக்கான். இவ சாமிக்கண்ணு வீட்டு கருமாதிக்குப் போயிட்டு, இராத்திரி ஒம்போது மணிக்கி வீட்டுக்கு வந்துதான் சோறு போட வேண்டியிருந்திச்சி. சாப்ட்டு முடிச்சதும் வரந்தாவுக்குப் போயி, சேர்ல ஒக்காந்துகிட்டான். அவ்ளோ சத்தம் போட்டு யாரையோ திட்டியிருக்கான் போல. அப்படி என்னாதான் வெவரணையோ தெரியல. கடல் தொழிலுக்குப் போயி அஞ்சி வருசம் இருக்கும் . அம்பத்தஞ்சி வயசுதான் ஆகுது. ஆனா கட்டுமரம் வலிச்சி, வலிச்சி, முதுகு தண்டு கூன் வுழுந்து போச்சி. ஒரே ஆளா வல அணச்சிகிட்டுப்போய் மீன் புடிச்சி வந்தவருதான். அப்பேர்பட்டவர் கட்டுமரம் கரயிலேர்ந்து செலுத்தறப்ப தலகீழா கவுந்துடிச்சி. அதுக்குள்ள மாட்டிக்கிட்டாரு. அப்ப அங்க இருந்தவங்க பாத்துட்டுக் காப்பாத்திட்டாங்க. வேற

யாரு என்னா பண்ணாங்க இவர யோசித்தவளாய் வள்ளி வூட்டுக்குள்ள நொழைஞ்சு மறுபடியும் நோட்டமிட்டா. தம்பி சாப்டதுக்கான அறிகுறி ஏதும் தெரியல. ஆக்கி வச்ச அம்புட்டும் அப்படியே கெடக்கு. அண்ணன், தம்பி ரெண்டு பேரும் சாப்புடலனா.. ரெண்டு பேருக்கும் சண்டயோ… என்னிக்காவது அரிதா இப்படி நடக்கறது உண்டு. தம்பி எங்க போயிருக்கும? இந்தாளும் இன்னும் சாப்ட்டு பேசாம என்ன பண்ணிகிட்டிருக்கு என்ற யோசனையோடு வரந்தாவுக்கு வந்து எட்டிப் பாத்தாள்.

புருசன் தூங்கறாப்ல தரயில கெடந்தான்.

“ஏய்யா, தம்பி எங்க போயிருக்கும் இன்னும் சாப்புட வரல” ஏதோ ஒரு எத்தனிப்பில் மீண்டும் இவ கேட்டதுக்கு ஒரு பதிலும் காணாம். மூஞ்ச தூக்கி வச்சிகிட்டு திரும்பிப் படுத்துக் கொண்டான் வள்ளி புருசன் சுப்புராயன்.

சரி, ஏதோ வெசனத்துல இருக்காருன்னு நெனச்சிகிட்டு, வள்ளி அடுப்படிக்கிப் போய் சோத்த தட்டுல போட்டாந்து, அவன் படுத்துக் கெடந்த எடத்துலயே ஒக்காந்து சாப்ட. ஒன்றும் பேசாம எழுந்து ஒக்காந்தவன் என்ன யோசிச்சானோ எழுந்து வெளியே போயிட்டான். வகையான மீன்கொழம்பு சோற பெசஞ்சி சாப்டாள். இருந்தாலும் தொண்டயிலே எறங்கமாட்டுது.

இந்த கொழுந்தன் தம்பி எங்க தான் போயிருக்கும். மணி பத்தாவ போவுதே இன்னும் காணாமே, இந்த வேளக்கி எங்கயும் போவாதே, குடிச்சிட்டு வந்து கம்முனு படுக்கற புள்ள எங்க போச்சி என மனசுக்குள்ளே ஆராஞ்சபடியே வூட்லேர்ந்து வெளியே வந்து பாத்தாள். அவபுருசன் சுப்பராயன் தான் வெளிய வெறுந்தரைல படுத்துக் கெடந்தான். ஏதோ அண்ணந்தம்பிக்குள்ள நடந்திருக்கு. வரட்டு ஆங்காரம் புடிச்ச ஆளா இருக்காரு,

இதுக்கு மேல இவர மல்லுக்கட்ட முடியாது என அப்படியே விட்டுட்டாள். என்னிக்கி இல்லாத இன்னிக்கி ஏன் இவுரு இப்படி நடந்துக்கறாரு. தான் அந்த தெருமுக்குட்டு வரும்போது, இவரு பேச்சு கேட்டுச்சே.. இப்ப ஏன் அமுக்கனாங்கெளங்காட்டாம் வெரச்சிகினு வீம்பு பண்ணுது. சரி இப்ப ஏதாச்சும் பேச வேணாம். காலைல பாத்துக்கலாம், சரி

**என்னை விட்டுவிட்டு**
**என் நினைவை மட்டும்**
**எடுத்து செல்லும் அந்த**
**அன்னப் பறவையை**
**தேடுகிறேன்!**

**மீண்டும் மீண்டும்**
**தனிமை எனும் இருளில்**
**தள்ளபடுகிறேன்…**
**உன் நினைவு காதலால்!**

**ச.இராஜ்குமார்**

தூங்கட்டும் இவரு இங்கியேன்னுட்டு, வூட்லேர்ந்து வெளிய வந்தாள். அப்பதான் அவளை நாகம்மா கடந்து போகப் பாத்தாள்.

“யக்கோவ், நாகம்மாக்கா, கருமாதி வூட்டுக்காப் போர, என் கொழுந்தன்னைப் பாத்தியா, மணி ஒம்போதரையாவுது இன்னும் வூடு வந்து சேரல”

‘‘ஏன் தங்காச்சி, பக்கத்துத் தெருவுல, கவுருமெண்டுலேர்ந்து வந்து ஒரு படம் போட்டு காட்றாங்களே, அங்க போயிருக்குமோ?”

“என்னா படங்க்கா”

“மரம் வளக்கறது எப்புடினு படம் போட்டு காட்னாங்க, எங்க மரம் வக்கறது, இருக்கற தெருவுல மரம் நட முடியல. சிமெண்டு ரோடா போட்டானுவ. கொஞ்ச நஞ்சம் கெடந்த எடமெலாம் வூடாயி போச்சி, மண்ணு எங்க கெடக்கு மரம் எங்க நடறது’

“இருக்குக்கா, எங்க ஊர்ல, அகண்டு பரந்து கெடக்கு, அது ஒன்னுதான் மிச்சமா கெடக்கு” நமுட்டு சிரிப்போட சொன்னாள் வள்ளி.

## ஹைக்கூ

பெண்களுக்கு இல்லை
ஆண்களுக்கு உண்டு
ஞாயிற்றுக்கிழமை

பதரைத் தூற்றிடும்
முறத்தின் கைகள்
களத்து மேடு

தாலாட்டு
கேட்க முடியவில்லை
முதியோர் காப்பகம்

**புதுவைக் குமாரி**

“என்னடி சொல்ற, மெட்ராசாலயா” ஆச்சர்யத்தோடே கேட்டு நாகம்மா.

“ஆமாக்கா, பொய்யா சொல்றன், எங்க மெரினா பீச்சுல எம்மாத்தரம் எடம் கெடக்கு, அதத்தான் சொன்னேன்” என்றாள்.

“போடீ, வேலவித்தவளே..” கெக்கேபிக்கேனு சிரித்தபடி, வள்ளியைக் கடந்து போனாள்.

நாகமாக்கா சொல்றது உண்மதான்.

இருபத்தஞ்சி வருசத்துக்கு முன்னாடி இவ வாக்கப்பட்டு வரும்போது பதினாறு வயசிருக்கும். ஒரு சின்ன குடிசை வூடு. சுத்தியும் பூருச மரமும் முருங்கமரமும் ஜோரா வளந்து கெடக்க, சுத்திலும் பனவோல வேலி. அங்க இங்கனு பெருக்கி வார்றதுக்குள்ள முதுகுதண்டே வலிக்கும். ஊட்ட சுத்தி படுத்துப் புரண்டு எழுந்தாலும் அழுக்காவாது . அப்படியொரு வம்பாமணல், தும்ப பூவாட்டமா கிடக்கும். பூருசமரத்தடியில பொம்பள புள்ளைங்க சொங்கரக்கா வெளயாடுங்க. இப்ப அந்த எடம், மண்ணு எங்கே போச்சி?

அண்ணந்தம்பி ரெண்டு பேரும் கண்ணாலமாயி ஒரே வூட்லதான் வாழ்ந்தாங்க. மாமனார் எறந்த பொறகுதான் வூடரெண்டா பிரிச்சது. அது பிரிச்ச மாதிரியும் தெரியாது. ஒரே அடுப்பங்கரதான். அவ ஓரவத்தி அப்டி அப்படயே போட்டு வச்சிருப்பா. மீன் வித்துட்டு வந்த வள்ளி, அடுப்பு பூந்து சோறுகரிய ஆக்கிப்போடுவா. வீட்ல இருக்கறவதான். சுத்த சோம்பேறி, அவ புள்ளவளும், கொழுந்தனும் இவகிட்டதான் சாப்பிடுங்க. மனம் கோணாம அத்தினியும் செய்வா. புள்ளைங்க ஓடியாடி பூருச மரத்தடியில வெளயாடுவாங்க.

சுனாமிக்கிப் பொறவுதான் இத்தினி மாற்றம் வந்துச்சி. ஊருக்குள்ளார உள்ள தெருவுலாம் சிமெண்ட் ரோடாச்சி. மரமெலாம் வெட்டி போட்டாச்சி. இருந்த மண்ணெலாம் மாயமாகி போச்சி. வூடுகளா நெறஞ்சி கெடக்கு இப்ப. இந்த இருபது வருசங்கொள்ள எத்தினி மாற்றம். வாழ்க்கயிலயும்கூட எண்ணியபடியே பக்கத்துத் தெருவுக்குப் போய் கொழுந்தன தேடினாள். கொழுந்தங்காரன இங்க பாத்தேன், அங்க பாத்தேன்னு சொன்னாங்களே தவிர யாரும் உருப்படியா சொல்லக் காணாம். மீண்டும் வூடு திரும்பினாள். வழியில் எதுத்த விட்டு கந்தன் வந்தான்.

“ஏன் தம்பி, என் கொழுந்தன பாத்த”

“ஆங், அவர எங்கயோ பாத்தனே” ஏதோ யோசித்தபடி பேசினான். மேலும், தயக்கத்தோடே பேசுவதுபோல் தெரிஞ்சது.

“இல்ல தம்பி, சாப்டகூட இல்ல இன்னும். இம்மா நேரத்துக்கு சாப்டாம இருக்காது. மறுபடியும் குடிக்க கிடிக்க போச்சோ”

அக்கா எனத் தயக்கத்தோட பேசிய மணி, எதுத்த வூட்ல இருக்கற தம்பி. வாக்கப்பட்டு வந்த நாள் மொதலா, தான் ஒடம்பொறந்த தம்பி போலவே பாசமாயிருப்பான்.

“நான் ஒன்னு கேப்பேன். என்ன தப்பா நெனச்சிக்கிடக் கூடாது , சரியா” என்று பீடிகை

போட்டான். இவ்ளோ அந்நியோன்யமா இருக்கறவன் ஏன் இழுத்து இழுத்துப் பேசறான். இப்படித் தயங்கி பேசறத பாத்தா என்னமோ நடந்திருக்கு போல என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டாள் வள்ளி.

“அட, சொல்லு தம்பி, நான் என்ன நெனக்க போறேன், உனக்கு தெரியாம என்ன விசயம் இருக்கப் போவுது”

“அது உங்க கொழுந்தன பத்தித்தான்..”

“அத பத்தித்தான் உனக்குத் தெரியுமே தம்பி”

“நீ கருமாதி வூட்டுக்குப் போயிட்டியிலே அக்கா, அப்ப மாமா சின்ன மாமன்கிட்ட சண்ட போட்டாரு, அதான்” அவள் மொகத்தையே கூர்ந்து பாத்தான் மணி. மின்கம்ப வெளிச்சத்தில் அவள் முகத்துல ஏதும் தெரியல.

சிறிது நேரம் மௌனம் நிலவிச்சி.

பிறகு தொண்டய கனைத்துக்கொண்டு சொன்னான்.

“அக்கா, உன் பக்கத்துல சின்னமாமன் படுத்துக் கெடந்தார்னு மாமா சண்ட போட்டார்க்கா” கம்மியக் குரலில் மெதுவாக சொன்னான். அப்புறம் அக்கா, சின்ன மாமாவ வூட்டவ்வுட்டுப் போகனும்னு பஞ் சாயத்துல படி கட்டியிருக்கார்க்கா” சிறிது அச்சம் கலந்த தயக்கத்துடன் சொன்னான்.

இதகேட்ட வள்ளி, கோபப்படுவாள் இல்லன்னா வருத்தப்படுவான்னு நெனச்ச மணிக்கு, வள்ளி சிரிக்கும் ஓசை கேட்டது.

“ஏம்பா, தம்பி மணி, அது பொண்டாட்டி செத்துலேர்ந்து யார்ட்ட இருக்குது. ஒரு எடம் போயி இதுவரக்கும் எங்கியாச்சும் தங்கியிருக்கா சொல்லு. உங்கள் வுட்டா யாரு இருக்கா அதுக்கு. பொண்டாட்டிப் புள்ளன்னு பறிபொடுத்துட்டு நின்னப்ப, யாரு கண்ணுல கரிச்சது. இந்த கூறுகெட்ட ஆளுக்கு எங்க புத்திப் போவுது பாரு, இப்பப் போயி யாரு பாடஞ் சொல்லித்தரது” என்றவள், யேப்பா நீ பஞ்சாயத்து தானே, என்கூட என்வூட்டுவரிக்கும் வா” என்று அழச்சிப் போனாள். அவளைத் தொடர்ந்து போன மணிக்கு வள்ளிக்கா மேலிருந்த அபி ப்ராயம் இன்னும் கூடுதலாயிற்று.

வீட்டடைந்தனர் இருவரும். வெளியே தூங்கிக்கிடந்த புருசன் உள்ளே போயிருக்கான் என்பதை அறிஞ்சவளாய், மணியை உள்ளே வரும்படி அழைச்சாள்.

வராந்தாவில் நாக்காலில உக்காந்து இருந்த புருசனை ஏற எறங்க பாத்தா. தொண்டய செருமியபடி, “எங்க ஒங்களுக்கு கொஞ்சமாச்சும் எண்ணமிருக்கா. நீ தூக்கி வளத்த உன் தம்பி சுனாமி வந்து அனாதரவா நின்னப்ப, நீதானே கவலப்படாத தம்பி, நானிருக்கேன்ன. அதுலேர்ந்து இதுவரிக்கும் எங்கியாச்சும் போயி சோறுதண்ணி துன்னிச்சின்னு கேள்வி பட்டிருக்கியா சொல்லு. எவளையாவது கையப்புடிச்சி இழுத்தான் உன் தம்பின்னு கேள்விப்பட்டிருக்கியா சொல்லு” அந்த இடத்தில் மூணுபேரு இருந்தாலும் மௌனம் நெரம்பி வழிஞ்சது.

“இவுரு என்ன பண்ணாலும் என்னால, இந்த உசிரு இருக்கவரக்கும் வுடமுடியாது தம்பி, என்னவேணா பண்ணிக்க சொல்லு இவர்” என்று உறுதியாகக் கூறினா வள்ளி.

சேரி சரி உன்னிஷ்டப்படி செய்யு என்றான்.

“சரி தம்பி, நாளைக்கி இவரு பஞ்சாயத்துக்கு வந்து, தம்பி மேல படி கட்னத வாபசு வாங்கிப்பாரு, சரியாங்க”

சரியென ஒரு தலையாட்டி பொம்ம மாதிரி தலயாட்னான் சுப்புராயன்.

“சரி தம்பி லேட்டாவுது, கருமாதி வூட்டுக்குப் போவனும். ஏங்க, தம்பி வரும் சாப்ட வைங்க, வரேன்.” என்றவள் வீட்டை விட்டு கருமாதி வூடு நோக்கிப் போவ ஆரம்பித்தாள்.

மணியின் மனதில், வள்ளி மேலே கெடக்கும் ஆகாசமானாள். இந்த ஆகாசம் யார்க்கும் கட்டுறுவதேயில்லை. அது தனக்குள் பரந்து விரிந்து கெடக்கிறது, அவ்ளோதான் என்று உள்ளுக்குள் வியந்தபடி எதிர் வூடு நோக்கி நடக்கலானான் மணி. ■

# வெற்றி பெற திட்டமிடுங்கள்




## முனைவர்.நா.சங்கரராமன்
**தமிழ்த்துறை**
**எஸ். எஸ். எம். கலை அறிவியல் கல்லூரி**
**குமாரபாளையம் நாமக்கல் மாவட்டம்**


**சரியான திட்டமிடலே**
**பாதி வெற்றியைத் தந்துவிடுகிறது**
**வெற்றி பெற திட்டமிடுங்கள்**

*சதா பாரதி*

எதையும் சரியாகத் திட்டமிடும்போது நாம் பாதி இலக்கினை எட்டிவிட்டோம் என்ற நிம்மதி நமக்குள்ளே பிறந்துவிடும். தேர்வுகளின்போது பாடங்களைச் சரியானதிட்டமிடலோடு படிக்கத் தொடங்கினால் போதும்;. வெற்றிக்கனிகள் உங்கள் பக்கமே வரும். வாழ்க்கையும் நமக்கு பல நேரங்களில் தேர்வுகளையே ஞாபகப் படுத்தும். அதைச் சரியான முறையில் நாமும் கையாள வேண்டும் என்பதையே நம்முடைய ஒவ் வொரு நிமிடமும் நமக்கு ஞாபகப் படுத்தும். மிகச் சரியான முறையில் நாம் வாழ்க்கையை எதிர்கொள்வது அவசியமாகிறது.

கடைசி நிமிடத்தயாரிப்புகள் சில நேரங்கள் வேண்டுமானால் நமக்கு கை கொடுக்கலாம். பல சமயங்களில் அதுவே நமக்கு மிகப்பெரிய எதிரியாக வந்து நிற்கும். நம்முடைய நிகழ் நிமிடங்களை நாம் மிகச்சிறப்பான முறையிலே அமைத்துக்கொள்ளுதல் வேண்டும். அடுத்தடுத்த நிமிடங்கள் சிறப்பாக அமைய வேண்டும் என்றால் நிகழ்காலங்களை சரியான வகையில் நாம் பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். பல நேரங்களில் நாம் ரயில்களையும் பேருந்து களையும் தவறவிட்டதின் மூலமாகவே நமது நல்ல வாய்ப்புகளை நாம் இழந்திருப்போம். அதற்கு அடிப்படை காரணம் நம்முடைய சாதாரண கவனக்குறைவே காரணமாக இருந்திருக்கும். மிகப்பொஜீய சாதனைகளை சிறுசிறு கவனக்குறைவுகளின் மூலமாகவோ சரியான திட்டமிடல் இல்லாமலே நடக்க இல்லாமல் போயிருக்கும்.

உங்கள் மேல் உள்ள அதீத அன்பாலும் தாங்கள் வாழ்விலே பட்ட கஷ்டங்கள் எக்காரணம் கொண்டும் தங்களின் குழந்தைகள் படக்கூடாது என்பதிலே மிகுந்த அக்கறை உடையவர்கள் பெற்றோர்கள்.. அவர்களின் உணர்ச்சிவசப்பட்ட சில செயல்பாடுகளை நாம் தொந்தரவு என்று ஒரு போதும் கருதிடக் கூடாதுநம்முடைய பெற்றோர்கள் நம்மை சரியான புரிதலோடு வழிகாட்டுவார்கள் என்ற நம்பிக்கை யுடையவர்கள் யாரும் இங்கே தோற்றுப் போவதில்லை. அவர்களின் அனுபவங்களும் நம்மை வழிநடத்தும் என்ற நம்பிக்கையோடு செயல்படுபவர்கள் அவர்களை ஒரு போதும் மன உளைச்சலுக்கு ஆளாக்க விடமாட்டார்கள். மாதா, பிதா, குரு தெய்வம் என்ற வரிசையில் ஒரு உண்மை ஒளிந்திருப்பதை மாணவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். இவர்கள் யாரும் நம்மிடம் ஏதும் எதிர்பார்க்காமல் நமது முன்னேற்றதை ரசிப்பவர்கள். நாம் சம்பாதித்து என்ன செய்தாலும் அது அவர்களுடைய சேவைக்கும் அன்பிற்கும் ஈடாகாகது

அவர்களுடைய அன்பை நாம் ஒருபோதும் உதாசீனப் படுத்திட இயலாது. நம்மில் பலரும் முதல் தலைமுறையில் பள்ளிக்கோ கல்லூரிக்கோ செல்லும் மாணவர்களாக இருப்போம். அப்படிப்பட்ட

சூழலில் அவர்களின் பெருமிதமும் அன்பு உணர்ச்சியும் நம்மை குறித்த எதிர் பார்ப்புகளும் அதிகமாகும்போது நாம் அதனை உணர்ந்து கொண்டு அவர்களுக்கு புரியும் படி உரைக்க வேண்டும் ஆத்திரப் படக்கூடாது. அவர்களின் காலச்சூழல் பல நேரங்களில் அவர்களை புரியமால் பேச வைத்து விடுகிறது. அதை நாம் பொருட்டாக கூட கருதக் கூடாது. ஒவ்வொரு முறையும் நம்மீது அதீத அக்கறையொடு அவர்கள் சொல்வதை மனதிலே இருத்திச் செயல்படும்போதே வெற்றி எளிதிலே கிடைத்து விடும் பொருளாகி விடுகிறது. ஒவ்வொரு முறையும் நம்முடைய நேரங்களை பயனுள்ள முறையில் செலவழிக்க வேண்டும். நம்முடைய ஒவ்வொரு விஷயத்தையும் நம்மை விட அடுத்தவர்களே கவனித்து வருவார்கள் என்பதையும் நாம் நினைவில் வைத்து செயலாற்ற வேண்டும்.

இந்த உலகின் மிக முக்கியமான தலைவர்கள் அனைவரும்ஒருகுறிப்பிட்டஉயரத்தையும்புகழையும் அடைவதற்கு முன்னா் அவர்கள் அவர்களுடைய இயல்பிலேயே இயங்கி இருக்கலாம். ஆனால் நிச ச்யமாக உயரத்தை அடைந்த அனைவரும் சரியான திட்டமிடல் இல்லை என்றால் அவர்களுடைய இடத்திலே தொடர முடியாது என்பதே அனைவரும் அறிந்து கொள்ள வேண்டிய உண்மையாகும். விண்வெளிக்கு அனுப்ப வேண்டிய ஏவுகணையாக இருந்தாலும் சரி, பள்ளிக்கு செல்ல வேண்டிய பிள்ளைகளாக இருந்தாலும் சரி சரியான திட்டமிடல் இருந்தால் மட்டுமே வெற்றி சாத்தியமாகிறது. இன்றைய சூழலில் உலக அளவில் மிக அதிகளவு பெருகி வரும் நோய்களில் ஒன்றாக மன அழுத்தம் இருந்து வருகிறது. நிச்சயமாக நாம் கவனிக்க வேண்டிய வருத்தப்பட வேண்டிய ஒன்றாகவும் இது இருக்கிறது . களையப்பட வேண்டிய ஒன்றாகவும் இருக்கிறது. சரியான திட்டமிடாத எந்த ஒரு செயலும் பல குழப்பங்களாலே அடுத்த நிலைநோக்கி செல்ல இயலாமல் தேக்கநிலை பெற்றுவிடும்.

**திட்டமிடாத மனிதருக்கு**
**ஒவ்வொரு நிமிடமும்**
**நெருப்பு நிமிடங்களே**

*சதா பாரதி*

உண்மைதான் திட்டமிடாமல் இருக்கும்போது நம்முடைய செயல்களில் வரும் தடைகள் நம்முடைய தலைமேல் அடிப்பது போன்றே பொறி கலங்கிப்போய் இருப்போம். எதிர்பாராத நிலையில் ஏற்படுவதே விபத்து எனப்படும். திட்டமிடாமல் ஒரு செயலைத் தொடங்குவதற்கு செய்வதற்கு பெயர் கொலை அல்லது தற்கொலை என்று கூட பெயர் வைக்கலாம். நிச்சயமாக அதனால் ஏற்பட்ட விளைவுகள் நம்முடைய வாழ்நாள் முழுவதற்கும் பாதிப்பை ஏற்படுத்தும்.எல்லையற்ற இயற்கை வளங்களையும் ,மனிதவளத்தையம் கொண்டுள்ள இந்த உலகிலே நிச்சயமாக அனைவரும் முன்னேற்றமடைவதற்கான வாய்ப்புகள் உள்ளன. நாம் அதைச் சரியாக திட்டமிட்டு செயலாற்றினால் வெற்றி என்ற இலக்கினை எளிதாக எட்ட

# புன்னகை

**அறியாமல் செய்துவிட்டேன்**
**மன்னிப்பாயா நீ...?**
**இனி செய்யேன்**
**குற்றம் பொறுத்தருள்வாய்!**
**காலங்கள் பல கடந்தும்**
**குற்றம் பொறுக்க மனமில்லையோ...?**
**என்னை முழுவதுமாய்**
**நேசித்த உன் மனம்**
**இன்று என்னை வெறுப்பதேனோ...?**
**புன்னகை மட்டும்போதுமே**
**நாம் மீண்டும் ஒருமிக்க...!**
**உதிர்க்காதோ உன் உதடு**
**சின்னதொரு புன்சிரிப்பை.?**
**கானல் நீராய் கிடக்கிறது**
**நட்போடு கலந்த**
**நம்மிருவர் நினைவலைகள்..!**
**மன்னிப்பது எப்போது..?**
**காத்து கிடக்கிறேன்**
**உன் புன்னகைக்காய்...!!!**

**மின்னொளி**
**(ஜெர்லின் பிரீமா)**

முடியும். கடைசி நிமிடங்களில்கூட வெற்றி; காத்திருக்கும் என்பதே அனைவருடைய நம்பிக்கையாகும். ஒவ்வொரு நாளும் காலை எழுவதில் தொடங்கி இரவு தூங்கப்போவது வரைக்கும் நம்முடைய நம்பிக்கையான நாளை நாம் சிறப்பானதாக வடிவமைப்பதில் இருந்தே நமக்கான வெற்றியும் தொடங்கிவிடுகிறது. உங்கள் ஒவ்வொரு நேரமும் சிலருடைய நேரங்களை தின்றுவிடுவதாக அமைந்துவிடுவது நம்முடைய துரதிருஷ்டமாகும்..

**நேரமோ பத்தரை**
**மாதமோ சித்திரை**
**உங்களை தழுவுவதோ நித்திரை**
**மறவாமல் எனக்கு**
**இட வேண்டும் முத்திரை**

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு தேர்தல் பிரச்சார கூட்டத்தில் பேசிய பேச்சு இது. அத்தனை நேரமும் காத்திருந்த தொண்டர்கள் அனைவரும் அவருடைய இந்த அடுக்குமொழிப்பேச்சிற்காக தவம் கடந்த காலகட்டம். அதைவிட தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிப்புலமை அண்ணவாவுக்கு உண்டு. முன்பெல்லாம் சாலைகளில் அதிகம் பயணித்த மக்களை சந்தித்து அவர்களுடைய வாக்ககளை பெற விரும்பிய தலைவர்கள் நிறைந்த தமிழகமும் இந்தியாவும் இருந்தது. வேறுபாடுகளை மறந்து நாகரிகமற்ற சொற்களைத் தவிர்த்து எதிரெதிர் அணியிலே பயணித்தால் சொற்களிலே ஒருவருக்கொருவர் போட்டிபோட்டிக்கொண்டு சொல் விளையாட்டுக் களாலும் கருத்து மோதல்களாலும் தழைத் தோங்கிய தமிழகமும் உண்டு. காலம் கடந்து வந்தாலும் மக்களின் விருப்பத்தை நிறைவேற்ற பாடுபட்ட தலைவர்களும், தனது தாமதத்திற்கு மன்னிப்பு கேட்ட வரலாறுகளும் உண்டு. ஏனெனில் நம்முடைய திட்டமிடான பயணத்தால் நமக்காக காத்திருப்பவர்களுடைய எத்தனை மணிநேரங்கள் வீணாகிறது என்பதை உணர வேணடும்.

இந்தியாவின் பிரதமராக வர ஆசைப் படுகிறேன்"

யாராவது ஒரு இளைஞனோ அல்லது பள்ளியில் படிக்கும் இளைஞனோ ஆக்ரோசமாக மேடையில் பேசினால் ஆச்சரியத்தோடு பார்க்கிறோம் எத்தனை அழகாக பேசுகிறான்



என்று பாராட்டுகிறோம். அவரிடம் மெதுவாக கேட்டுப்பாருங்கள் அதற்கான வழிமுறைகள் என்ன என்பது தெரியுமா?. தேர்தலில் நிற்பதற்கு வயது வரம்பு என்ன? வேட்பு மனு தாக்கல் எப்படி செய்ய வேண்டும். நிச்சயமாக அந்த சிறுவனுக்கு அந்த வயதில் தெரிய வாய்ப்பில்லைதான். இளைஞனுக்கு அது குறித்த புரிதல் இருந்தால் ஆச்சரியமில்லைதான். ஆனால் பிரதமர் போன்ற நாட்டின் மிக உயர்ந்த பதவிக்கு வர ஆசைப்படும் நம்மைப்போன்றவர்களுக்கு அந்த இடத்தை அடைவதற்கு அத்தனை உரிமையும் இருக்கிறது. அதற்கு இந்தியக்குடிமகனாக இருந்தாலே போதுமானது. ஆனால் அது மட்டுமே போதுமானதா? என்று கேட்டால் நிச்சயமாக இல்லை. குறைந்த பட்சம் நமது ஊரில் ஒரு வார்டு கவுன்சிலர் அளவிலாது போட்டியிட்டு நமது செல்வாக்கை நிருபிக்க வேண்டும் . அதன் பின்னர் படிப்படியாக முன்னேறி அதுபோன்ற உயர்ந்த பதவிகள் நோக்கி செல்ல வேண்டும். அதற்கு நிச்சயமாக சரியான திட்டமிடலே சாத்தியமாக இருக்கமுடியும். அவசரத்திலோ அல்லது மற்றவர்கள் பாராட்ட வேண்டும் என்பதற்காகவோ நாம் எடுக்கும் சில தவறான முடிவுகள் நம்முடைய வாழ்வை தலைகீழாக புரட்டக்கூடிய வல்லமை படைத்தது. எனவே நம்முடைய அனைத்து முடிவுகளும் குறைந்த பட்சம் அடுத்த பத்து ஆண்டுகளை மனதிலே வைத்து செய்ய வேண்டும் என்பதே மிகச்சிறந்த தலைமைப்பண்பாகும்

**ஒன்றே செய்**
**ஒன்றும் நன்றே செய்**
**நன்றும் இன்றே செய்**
**இன்றும் இப்போதே செய்**

என்ற வாக்கினைக் கேட்டிருப்போம். நம்முடைய வளர்ச்சிக்கும் சமூக வளர்ச்சிக்குமான விஷயங்களை உடனே தொடங்குதல் அவசியமானதாகும். வேலையைத் தள்ளிப்போடும் ஒவ்வொரு நிமிடமும் வெற்றியையும் தள்ளிப்போடுகிறோம் என்ற உணர்வு நமக்குள்ளே ஏற்பட வேண்டும். மிகச்சாதாரண சிறிய வேலைகளைக் கூட நமது சோம்பேறித்தனத்தால் சரியாக செய்ய இயலாமல் போன பின்பு வருந்தி இருக்கிறோம். அடுத்தமுறை இதைச்சரியாக செய்திட வேண்டும் என்ற சபதம் ஏற்போம். இரண்டொரு நாட்களில் அந்த சபதம் என்னவாயிற்று என்ற நிலை தெரியமால் மறந்துபோய்விடுவோம் என்பதே நாம் இதுவரை அறிந்த ஒன்றே ஆகும். சிறிதும் யோசிக்காமல் மனம் ஒரு நல்லதைச் செய்ய தொடங்க வேண்டும் என்று ஆசைப்பட்டால் அதை உடனடியாக ஆரம்பித்துவிடுங்கள். பலமுறை பல நேரங்களில் நானும் இதுபோன்ற பல நிகழ்வுகளை அனுபவித்துள்ளேன். சில சம்பவங்கள் நடைபெறும்போது அது குறித்து ஏதேனும் பதிவோ கட்டுரையோ எழுத வேண்டும் என்று யோசித்து வைத்திருப்பேன். மறுநாள் காலை அது குறித்த எழுதலாம் என்று நினைத்து உறங்கிள எழுந்தால் முகநூலிலும். இணையத்திலும் ஏராளமான கட்டுரைகள் முளைத்திருக்கும். நாம் நினைத்ததை விட சற்றே சுமாரான கட்டுரைகள் மிகப்பெரிய பாராட்டுக்களைப் பெற்று அது சில நேரங்களில் பரிசுக்குரியதாகவும் ஆகி இருக்கும். அந்த கட்டுரை தகுதியான நபர் எழுதியிருந்தாலும் நமது யோசனை வந்தவுடன் பதிவிட்டு இருந்தால் அந்த பரிசும் பாராட்டும் நமக்கே கிடைத்திருக்கும். தவற விட்டுவிட்டோமே என்று மனம் கலங்கி நிற்கும்போதுதான் நமது சோம்பலாலும், திட்டமிடாத தன்மையாலும் இழந்தவைகள் எல்லாம் நமது மனதிற்குள் வந்துபோகும். இது எனக்கு கட்டுரை வடிவிலானதாக இருக்கலாம். அதுவே பணியிடத்தில் பதவி உயர்வு, புதிய பொறுப்பு என்று எதுவாக இருந்தாலும் சரியாகவே இருக்கிறது. நிச்சயமாக நமது உழைப்பிற்கான அங்கீகாரம் வரும். ஆனால் அந்த உழைப்பும் முயற்சியும் சரியான திட்டமிடலோடு சரியான காலத்தில் இருந்தால் மட்டுமெ அது சாத்தியமாகும் என்பதை உணர்ந்து செயலாற்ற வேண்டும்

நம்முடைய உயரங்களும் வளர்ச்சிகளும் நிச்சயமாக அடுத்தவருடைய கட்டுப்பாட்டில் இல்லை என்பதை உணர வேண்டும். நமது முயற்சிகளும் சரியான திட்டமிடல்களும் நம்மை இன்னும் உயர்வான இடத்தை நோக்கி நகர்த்திச் செல்லும் என்பதிலே யாருக்கும் மாற்றுக் கருத்தில்லை

**திட்டமிடலே**
**பாதி வெற்றியைத் தந்து விடுகிறது**
**வெற்றிக்கு திட்டமிடுங்கள்**

*சதா பாரதி*



# நூலகம்!

## கவிஞர் இரா. இரவி

அகம்
தூய்மையகம்
நூலகம்!

அறிவு வளர்க்கும்
அற்புத இடம்
நூலகம்!

பண்பாடுப் போதிக்கும்
பயனுள்ள இடம்
நூலகம்!

அறவழிப்படுத்தும்
அழகிய இடம்
நூலகம்!

அறிவாளிகள் இருக்கும்
அறிவார்ந்த இடம்
நூலகம்!

அமைதிப் படுத்தி
மதி வளர்க்கும் இடம்
நூலகம்!

விலைமதிப்பற்ற நூல்களின்
வசிப்பிடம்
நூலகம்!

மறைந்த தலைவர்கள்
மறையாமல் வாழுமிடம்
நூலகம்!

புரட்டப் புரட்ட
புத்திப் புகட்டுமிடம்
நூலகம்!


எடுத்துப் படிக்க
இனிமை கூட்டுமிடம்
நூலகம்!

வயது பேதமின்றி
வாசகரை உயர்த்துமிடம்
நூலகம்!

சாதி மத பேதமின்றி
சமத்துவம் கற்பிக்குமிடம்
நூலகம்!

அரசுப்பணி ஆட்சிப்பணி
கிடைக்கக் காரணம்
நூலகம்!

கடன் கேட்காத
நல்ல நண்பன்
நூல்!



# ஆனையும் யானையும்

வெஞ்சமர் காணும்
குஞ்சரம் இதுவே.

தோரண வாயிலில்
வாரணம் இதுவே.

புத்தியில் தெளிந்த
அத்தியும் இதுவே.

உருவில் பெருத்த
கரியும் இதுவே.

உலகம் விரும்பும்
களபம் இதுவே.

வெளிரும் மனத்தின்
களிறும் இதுவே.

ஆதங்கம் தந்திடும்
மாதங்கம் இதுவே.

முந்தியே வந்திடும்
தந்தியும் இதுவே.

நாங்கள் வியக்கும்
ஓங்கல் இதுவே.

சாதகம் செய்யும்
போதகம் இதுவே.

ஞாலம் வியக்கும்
வேழமும் இதுவே.

ஆல்போல் பருத்த
நால்வாய் இதுவே.

கவிஞர்.அ.முத்துசாமி,
தாரமங்கலம்.

# உங்களுக்கு 40 முதல் 50 வயதாகிவிட்டதா?

## அப்படியென்றால் இதை அவசியம் படியுங்கள்!

**உடனே மனது ஏற்காது. ஆனால் உண்மை**

நம்மில் யாருமே இன்னும் பல ஆண்டுகள் உயிரோடு இருக்கப்போவதில்லை.

போகும் போது எதையும் எடுத்துக்கொண்டு போகப் போவதில்லை. ஆகவே சிக்கனமாக இருக்காதீர்கள்.

செலவு செய்ய வேண்டியவற்றிற்கு செலவு செய்யுங்கள். மகிழ்ச்சியாக இருக்கவேண்டிய நேரத்தில் மகிழ்ச்சியாக இருங்கள்.

உங்களால் முடிந்த தான தர்மங்களை யோசிக்காமல் செய்யுங்கள்!

எதற்கும் கவலைப் படாதீர்கள். நீங்கள் கவலைப் படுவதால் எதையும் நிறுத்த முடியுமா? வருவது வந்தே தீரும்!

நாம் இறந்த பிறகு, நமது உடைமைகளுக்கு என்ன ஆகுமோ என்று கவலைப் படாதீர்கள். அந்த நிலையில், மற்றவர்களுடைய பாராட்டுக்களோ அல்லது விமர்சனங்களோ உங்களுக்குத் தெரியப் போவதில்லை.

நீங்கள் கஷ்டப்பட்டு சேர்த்தவை அனைத்தும், உங்கள் வாழ்க்கையோடு சேர்த்து முடிவிற்கு வந்துவிடும்.உங்களைக் கேட்காமலேயே அவைகள் முடிக்கப்பட்டுவிடும்.

உங்களின் குழந்தைகளைப் பற்றிக் கவலைப் படாதீர்கள். அவர்களின் வாழ்க்கை அவர் களுக்கு விதித்த விதிப்படிதான் அமையும். அதில் நீங்கள் எந்த மாற்றத்தையும் செய்வதற்கு வழியில்லை!

சம்பாதிக்கிறேன் என்று பணத்தைத் தேடி அலையாதீர்கள். பங்குச் சந்தைகள் பக்கம் தலை வைத்துப் படுக்காதீர்கள். பணத்தைவிட உங்களின் ஆரோக்கியம் முக்கியம். பணம் ஆரோக்கியத்தை மீட்டுத் தராது!

ஆயிரம் ஏக்கர் விளைநிலம் இருந்தாலும், நாளொன்றிற்கு அரை கிலோ அரிசிக்கு மேல் உங்களால் உண்ண முடியாது.

அரண்மனையே என்றாலும் கண்ணை மூடி நிம்மதியாகத் தூங்க எட்டுக்கு எட்டு இடமே போதும். ஆகவே ஓரளவு இருந்தால், இருப்பது போதுமென்று நிம்மதியாக இருங்கள்!

ஒவ்வொரு குடும்பத்திலும், ஒவ்வொரு மனிதனுக்கும் பிரச்சினைகள் இருக்கும். பிரச்சினை இல்லாத மனிதனைக் காட்டுங்கள் பார்க்கலாம்? ஆகவே உங்களை யாருடனும் ஒப்பிட்டுப் பார்க்காதீர்கள்.

பணம், புகழ்,சமூக அந்தஸ்து என்று மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்ளாதீர்கள்.

நீங்கள் மகிழ்ச்சியாகவும், ஆரோக்கியமாகவும், நீண்ட ஆயுளுடனும் இருந்து மற்றவர்களுக்கு உதாரணமாகத் திகழுங்கள்!

யாரும் மாற மாட்டார்கள். யாரையும் மாற்ற முயற்சி செய்யாதீர்கள். அதனால் உங்களின் நேரமும் ஆரோக்கியமும்தான் கெடும்.

நீங்கள் உங்களுக்கான சூழ்நிலையை உருவாக்கி, அதன் மூலம் எப்போதும் மகிழ்ச்சியாக இருங்கள். நீங்கள் ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கும். மன மகிழ்ச்சிதான் ஆரோக்கியத்திற்கு அடிப்படை !

உற்சாகத்தோடு இருக்கும்போது நோய் நொடிகள் குணமாகும். அனு தினமும் உற்சாகத்தோடு இருப்பவர்களை நோய் நொடிகள் அண்டாது.

நல்ல மனநிலை, உடற்பயிற்சி, சூரிய ஒளி, நல்ல உணவு, தேவையான விட்டமின்கள் ஆகியவை இன்னும் 20 அல்லது 30 ஆண்டுகள் உங்களை வாழவைக்கும்!!

அதற்கு மேல் என்ன வேண்டும் சொல்லுங்கள்?

எல்லாவற்றிற்கும் மேலாக, உங்களைச் சுற்றி நடப்பவை நல்லவைகளாகவே இருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள்.

வரும் நாட்கள் நலமாக இருக்க வாழ்த்துக்கள்!

# உலகம் சில நல்ல மனிதர்களைக் கொண்டது

ராஜ் குமார்

ஒரு ஆறு வயது சிறுவன் தன் நான்கு வயது தங்கையை அழைத்துக் கொண்டு கடை தெருவின் வழியே சென்று கொண்டு இருந்தான்.

ஒரு கடையின் வாசலில் இருந்த பொம்மையை பார்த்து தயங்கி நின்ற தங்கையிடம் ‘எந்த பொம்மை வேண்டும்?’ என்றான். பிறகு அவள் கூறிய பொம்மையை எடுத்து அவள் கையில் கொடுத்து விட்டு ஒரு பெரிய மனிதனின் தோரணையுடன் கடையின் முதலாளியை பார்த்து ‘அந்த பொம்மை என்ன விலை’ என்று கேட்டான்

அதற்கு சிரித்து கொண்டே அந்த முதலாளி,’ உன்னிடம் எவ்வளவு உள்ளது’ என்று கேட்டார் … அதற்கு அந்த சிறுவன் தான் விளையாட சேர்த்து வைத்து இருந்த அந்த கடல் சிப்பிகளை தன் பாக்கெட்டில் இருந்து எடுத்துக் கொடுத்தான் ….

‘இது போதுமா!’ என்று கவலையுடன் கேட்டான்.

அதற்கு அந்த கடைக்காரர் அவனின் கவலையான முகத்தை பார்த்துக் கொண்டே‘ எனக்கு நான்கு சிப்பிகள் போதும்‘ என்று மீதியை கொடுத்தார் …

சிறுவன் மகிழ்ச்சியோடு மீதி உள்ள சிப்பிகளோடும், தன் தங்கையோடும் அந்த பொம்மையை எடுத்து கொண்டு சென்றான். இதை எல்லாம் கவனித்து கொண்டு இருந்த அந்த கடையின் வேலையாள் முதலாளி யிடம், ‘அய்யா ஒன்றுக்கும் உதவாத சிப்பிகளை வாங்கிக் கொண்டு விலை உயர்ந்த பொம்மையை கொடுத்து விட்டிர்களே! அய்யா‘, என்றான்.

அதற்கு அந்த முதலாளி,’ அந்த சிறுவனுக்கு பணம் கொடுத்தால் தான் பொம்மை கிடைக்கும் என்று புரியாத வயது. அவனைப் பொறுத்த வரையில் அந்த சிப்பிகள் தான் உயர்ந்தவை. நாம் பணம் கேட்டால் அவன் எண்ணத்தில் பணம் தான் உயர்ந்தது என்ற மாற்றம் வந்து விடும். அதனால் தான் அதை தடுத்து விட்டேன். மேலும் தன் தங்கை கேட்டவற்றை தன்னால் வாங்கித் தர முடியும் என்ற தன்னம்பிக்கையை அவனுக்குள் விதைத்து விட்டேன். என்றோ ஒரு நாள் அவன் பெரியவன் ஆகி இந்த சம்பவங்களை நினைத்துப் பார்க்கையில் இந்த உலகம் நல்லவர்களால் ஆனது என்ற நல்ல எண்ணம் அவன் மனதில் தோன்றும். ஆகையால் அவன் எல்லோரிடமும் அன்பு காட்டத் தொடங்குவான். உலகம் அன்பினால் கட்டமைக்க பட வேண்டும்‘ என்று விளக்கம் அளித்தார்.

‘அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்‘ வாருங்கள் நாம் செல்லும் இடம் எல்லாம் அன்பை விதைப்போம் …

## அழகு

தோகை விரித்தாடும் மயில்....
மழை வெயிலில் தோன்றும் வானவில்...
மலையை முட்டும் மேகம்...
வளைந்து வளைந்து ஓடும் நதி...
வானத்திலிருந்து வழியும் கண்ணீர்...
வண்ணங்களை வரைந்துக்கொண்ட
பட்டாம்பூச்சி...
நந்தவனத்தில் சிரிக்கும் பூக்கள்...
இவை மட்டுமா அழகு..?
உலகின் உன்னைப் போல்
ஒருவருமேயில்லை...
நீயும் அழகு தானே..!!!

சு.பி.முருகன்
தர்மபுரி

முனைவர்.பெண்ணியம் செல்வக்குமாரியின் ‘‘திருநங்கையர் வாழ்நிலையும் பால்நிலையும்’’
நெய்தல் செயபாலின் ‘‘நண்டுகளும் சிண்டுகளும்’’

# இருநூல்கள் வெளியீட்டு விழா



புதுச்சேரி நடைவண்டி சிறார் இலக்கியக்கழகம், புதுவைத் தமிழ்சங்கத்தில் இணையரின் இருநூல்களின் வெளியீடு நிகழ்ந்தது. அந்நிகழ்வு ஓர் அரிய நிகழ்வு என சிலர் கருத்துத் தெரிவித்தனர்.

22.9.2018, சனி, மாலை ஆறரை மணிக்கு தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா இனிதே தொடங்கியது. நின்னைச் சரண்டைந்தேன் நூலின் கவிஞர் மேகலா செழியன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். அப்பொழுது பெண்ணியம் செல்வக்குமாரி, தனது தோழி எனவும் புதுவை பெண்பாரதி எனும் பாராட்டிப் பேசி வந்திருப்பவர்களை மேடையில் அமர அழைத்ததோடு அவர்களை வரவேற்றுப் பேசியவிதம் அருமை.

இவ்விரு நூல்கள் வெளியீடு செய்ய கரணகர்த்தாவாக விளங்கியவர் பொறிஞர்.கவிஞர். மு.பாலசுப்ரமணியன் (நடைவண்டி சிறுவர் இலக்கியக் கழகம்) புதுவைத் தமிழ்சங்கத்தின் செயலாளர். இவரின் சீரியப்பணியின்றேல் இந்நூல்கள் வெளியீடு இல்லையெனும் அளவிற்கு சிறப்பாக நடத்தினார். மேலும் அவர் பேசும்போது கடலுக்கும் அவருக்கும் இருந்த உறவைப் பற்றி நெகிழ்ந்து கூறியதோடு, தமக்கும் இணையருக்கு ம் உள்ள நட்பை மிக அழகாகச் சுட்டிக் காட்டினார்.





புதுச்சேரி முத்தியால்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நூல்வெளியிட, கலை இலக்கியப் பெருமன்றத்தின் தலைவர் தோழர் எல்லை.சிவக்குமார், முற்போக்கு எழுத்தாளர் கலை இலக்கிய சங்கத்தின் தலைவர் இருவரும் பெற்றுக்கொண்டு வாழ்த்திப் பேசினர்.

பிரான்சுதமிழ்நெஞ்சம் அமின் ஐயாவின் முயற்சியினால் இவ்விருநூல்களும் தமிழ்நெஞ்சம் வெளியீடாக வெளிவந்திருக்கின்றன என்பது பெரும் சிறப்பு. அவரின் தமிழுக்கான சேவையைப் பாராட்டி வாழ்த்தியதோடு, முனைவர் சிவ.இளங்கோ வாழ்த்துரை வழங்கினார். தோழர் சகாயராசு, முனைவர். அமிர்தவள்ளி, தமிழ்நெஞ்சன், விசாகன், சாது.அரிமாவளவன், காவல்துறை ஆய்வாளர் மேரி பிரான்சிஸ் ஆகியோர் மிக உருக்கமாக வாழ்த்துரை வழங்கினர். திருவையாபுரிமணிகண்டன் சட்டமன்ற உறுப்பினர், எழுத்தாளர் பி.என்.எஸ். பாண்டியன் ஆகியோரும் வாழ்த்தினர்.




இரா.எட்வின் அவர்கள் தம் தொடக்க வுரையில் ‘‘இந்நூல் அரவாணியர்பால் ஓர் அனுசரனையை உருவாக்கும். எனக்கு ஒரே மகன் ஓர் அரவாணி



எனச் சொல் காலத்தைக் கொண்டுவரும் நூல். ஆகவே அனைவரும் காசுக்கு வாங்கி படிக்க வேண்டிய நூல்" என்று திறம்படப் பேசியது சிறப்பாக அமைந்தது. அடுத்ததாக பேராசிரியர் இரவிக்குமார் அவர்கள் பேசும்போது "பல்கலைக்கழகப் பாடத் திட்டத்தில் கொண்டு சேர்க்கப்பட வேண்டிய சிறப்பு வாய்ந்த நூலாக இருக்கிறது" என சிறப்புரை ஆற்றினார்.

இளவரசி சங்கர் நல்ல அழகிய கவிதைகளால் தொகுப்புரை வழங்கியது அனைவரையும் கவர்ந்தது. இறுதியாக முனைவர். பெண்ணியம் செல்வக்குமாரி மனம் நெகிழ்வோடு ஏற்புரையும் நன்றியுரையும் வழங்க, விழா இனிதே நிறைவுற்றது. ■





# நிறம்மாறும் மனிதர்கள்



பொய்யான வார்த்தைகளும் பொய்த்துவிடும் இவ்வுலகில்
மெய்யான வார்த்தைகளே மெய்ப்பிக்கும் உண்மைநிலை
வெய்யோனின் சீற்றம்போல் வெற்றுரையாய்ப் பேசிடுவார்
உய்வில்லை எந்நாளும் உணர்ந்திடுவோம் எல்லோரும்.

வாக்கினிலே உண்மையிலை வழக்கிற்கே இடமுண்டாம்.
காக்கின்ற கல்வியையும் கணப்பொழுதில் காழ்ப்புணர்ச்சித்
தீக்கதிரால் கக்கிடுவார் தீச்சொற்கள் ஈங்கிவரே.
சாக்குகளும் பலசொல்வார் சங்கடங்கள் செய்திடுவார்.

வடுவாகி நின்றுவிடும் வாசமிலாப் பேச்சினாலே
கெடுதல்கள் மிகவதிகம் கேட்டவர்கள் அறிவார்கள்
மடுவதனில் தள்ளாதீர் மாசான சொற்களினால்
தொடும்நெஞ்சைச் சுட்டெரிக்கும் தோல்விகளே உண்டாகும்!!

அன்பாலே மாற்றுங்கள் அகிம்சையுடன் வாழுங்கள்
வன்முறைகள் தீச்சொற்கள் வடுதனையே உருவாக்கும்.
தன்னலத்தை விட்டொழித்தால் தரணியினை ஆண்டிடலாம்.
நன்னெறியைப் பற்றுங்கள் நவிலுங்கள் ஆன்றோர்சொல்!!

சரஸ்வதி பாஸ்கரன் திருச்சி

# கடுமையான பேச்சுகளைத் தவிர்ப்போம்

## படித்ததைப் பகிர்ந்தேன்...

- பையன்: ஹலோ
- பொண்ணு: என்னடா பண்ற...? கால் அட்டண்ட் பண்ண இவ்ளோ நேரமா...?
- பையன்: புரஜெக்ட் வேலை இருக்கு, அரைமணி நேரம் கழிச்சு பேசுறேன்னு கால் கட் பண்ணிட்டான்..
- பொண்ணு: வெயிட் பண்றா... 1 ஹவர் ஆச்சு, கால் வரல்ல... 2 மணி நேரம் ஆச்சு, கால் வரல்ல... இதுக்கு மேல வெயிட் பண்ண முடியாது (மறுபடியும் கால் பண்றா..)
- பையன்: ஹலோ
- பொண்ணு: அரைமணி நேரம் கழிச்சு கால் பண்றேன்னு சொன்ன, ஏன்டா கால் பண்ணல்ல...?
- பையன்: கால் பண்றேன்னு சொன்னா, கண்டிப்பா கால் பண்ணனுமா...? அறிவு இல்லையா உனக்கு..? பிஸியா இருக்கேன்னு சொன்னா புரியாதா...? சும்மா சும்மா கால் பண்ணி தொல்லை பண்ற...? எனக்கு வேற வேலை இல்ல...? 24 மணி நேரமும் உங்கூட பேசுறதுதான் என் வேலையா...?
- பொண்ணு: உங்கிட்ட பேசனும்னு நினைக்கிறது தப்பாடா...? ஏன்டா இப்படி பேசுற...?
- பையன்: ஹேய்... வேற ஏதாவது சொல்லிட போறேன்... போனை வைடி...
- பொண்ணு: ஸாரிடா என் தப்பு தான், இனிமேல் உன்னை டிஸ்டர்ப் பண்ண மாட்டேன்... ஸாரி.. ஸாரி... (அழுதுட்டே கால் கட் பண்ணிட்டா)

இரு நாட்களின் பின் பையன் கால் பண்றான்: அவ ரெஸ்பான்ஸ் பண்ணல்ல... கோவமா இருப்பாளோ...?

- பையன்: சே, நேத்து ஏதோ டென்ஸன்ல அவள் திட்டிட்டேன்... பாவம், ரொம்ப அழுது இருப்பா... (மறுபடியும் கால் பண்றான், அவ ரெஸ்பான்ஸ் பண்ணல்ல... மெஸேஜ் பண்றான். "ஸாரிடி செல்லம், நேத்து கோவத்துல திட்டிட்டேன், தப்பு தான்.. அவ்ளோ ஹார்ஷா பேசி இருக்க கூடாது.. ப்ளீஸ்_கால் அட்டண்ட் பண்ணு")

மறுபடி கால் பண்றான் (பொண்ணோட அம்மா அந்த பையனுக்கு பதில் சொல்றங்கா)

- பையன்: ஆன்டி (அந்த பொண்ணு பெயர் சொல்லி.. அவ இல்லையான்னு கேட்க்குறான்)
- பொண்ணு அம்மா: இல்லப்பா, அவ இறந்துட்டா (சொன்னதும் என்ன நடந்ததுன்னு புரியாமல் தவித்தான்)
- பொண்ணு அம்மா: உங்கிட்ட ஒரு லெட்டர் கொடுக்கச் சொன்னா... வந்து வாங்கிட்டு போ...

பையன் அந்த பொண்ணு வீட்டுக்கு போய் லெட்டர் வாங்கி படிக்கிறான்...

- பொண்ணு: எனக்கு தெரியும் நீ என்னைத்தேடி வருவேன்னு... எனக்கு உன்மேல எந்தக் கோவமும் இல்லடா... நீ பீல் பண்ணாத... எனக்கு ப்ரையின் டியூமர்... இது உனக்கு தெரிஞ்சா, நீ கஷ்டப்படுவேன்னு தான் சொல்லாம மறைச்சேன்..
- பொண்ணு: நேத்து எனக்கு ரொம்ப முடியல்ல, அதான் க்டைசியா உன்கிட்ட பேசலாம்னு கால் பண்ணேன்.. ஆனா, நீ பிஸியா இருந்த... உங்கூட இருந்த கொஞ்ச நாள் தான் நான் ரொம்ப சந்தோஷமா இருந்தேன்... இந்த ஜென்மத்துல எனக்கு இது போதும்டா... நீ அழாதடா.. நான் எங்கேயும் போகல்ல.. எப்பவும் நான் உன் பக்கத்துல தான் இருப்பேன்... மிஸ் யூ டா.. மிஸ் யூ லாட் மை டியர்...
- பையன்: ஏன்டி லூஸு எங்கிட்ட சொல்லாம மறைச்ச...? தெரிஞ்சிருந்தா, நான் எப்படியாவது உன்னைக் காப்பாத்தி இருப்பேன்டி... ஐயோ... ஏன்டி என்னை தனியா விட்டுப் போன... கதறிக்_கதறி அழுறான்)...

நட்புக்குரியவர்களிடம் எந்தச் சூழ்நிலையிலும் கடுமையான வார்த்தைகள் பிரயோகிப்பதை தவிருங்கள் சிலவேளை அடுத்த நாள் அவர்கள் உயிரோடு இல்லாமல் போகலாம். ■



## கண்ணுறங்கு!

முத்தே மணியே கண்ணே ஒளியே
முல்லைப் பூவே கண்ணுறங்கு!
அத்தை மடியே மெத்தை யாக
அழகு மயிலே நீயுறங்கு!
நித்தம் நடக்கும் அவலம் கண்டால்
நெஞ்சம் கொதிக்கும் பாராதே!
சத்த மின்றித் தோளில் சாய்த்துத்
தட்டிக் கொடுப்பேன் பொன்னுறங்கு!!

*சியாமளா ராஜசேகர்*




## பாடல்கள்

•
உன்னிடம்
சொல்ல நினைப்பதை எல்லாம்
சொல்லிவிட முடிவதில்லை

அதைக் கேட்கவும்
நீ தயாராக இல்லை

இது மட்டும் உண்மை
உன்னிடம் சொல்ல
நிறைய இருக்கிறது

•
ஒவ்வொரு
அழுகையின் போதும்
தொண்டைக்குள்ளே சிக்கி
வலியுடன் இறக்கின்றன
சொல்ல வந்த
அந்த சில சொற்கள்

கு.அ.தமிழ்மொழி

## தன்முனைக் கவிதைகள்

• உனது விழியிரண்டில்
துள்ளும் கயல்கள்
இன்னமும் எனது தூண்டிலில்
சிக்காமல் தப்புகிறது

• நெற்றியில் சூட்டிய சுட்டி
என்னையே சுட்டிக் காட்டுகிறது
ஓடி ஒளிந்து கொள்ளவில்லை
உணர்வுகளால் தலை நிமிர்கிறேன்

• பொன்னகைகள் சுமந்த
முகத்தில் பளிச்சிடுகிறது
முத்துப் பற்கள் உதிர்க்கும்
உனது புன்னகை மலர்கள்

• அழகுக்கு அழகு செய்ய
துணிந்தவர்கள் யார் ?
வெட்கமுடன் தலைகுனிகிறது
ஆபரணங்கள் !

கா.ந.கல்யாணசுந்தரம்

# எஸ்தர்

## மலையகம் (திருகோணமலையிலிருந்து)



# மலையக பெண்களும் சுகாதாரப் பிரச்சனைகளும்



மலையகம் என்றதும் பெரும்பாலானவர்க்கு குறிப்பாக ஏனைய பிரதேசங்களில் வாழ்பவர்கள் மலைநாட்டை நல்லதொரு சுற்றுலா தளமாகத்தான் பார்க்கிறார்கள். சிலுசிலுவென்று குளிரும் புதிதாக திருமணத்தில் இணைந்தவர்கள் தேர்ந்தெடுக்கும் தேனிலவு பிரதேசமாகவும் பாடசாலை மாணவர்களளுக்கான சுற்றுலா தளமாகவுமே மலைநாடு இன்றுப் பார்க்கப்படுகின்றது. மலையகத்தில் தேயிலையும் இறப்பரும் பயிரிடப்படுகின்றமை யாவரும் அறிந்ததே. மேலும், பிரித்தானியர்களால் 1815ம் ஆண்டு கண்டி கைப்பற்றப்பட்டப் பின்னர் மலைநாட்டை அவர்கள் ஒரு பெருந்தோட்டமாக மாற்ற முனைந்து அதில் வெற்றிப் பெற்றனர். இவ்வெற்றிக்கும் பொருளாதார செழிப்புக்கும் பிண்ணனியில் மிகப்பெரிய மனிதத்துன்பியல் வரலாறு கடந்த 200 வருடங்களாக தொடர்கின்றது என்பது மறுப்பதற்க்கு இடமே இல்லை.

மேலே நான் குறிப்பிட்ட தலைப்பை அணுகுவதற்கு முன் மலையகத்தின் சில வரலாறுகளை உங்கள் கண்முன் ஒரு வரலாற்று வரைபடத்தை விரித்துக்காட்ட விரும்புகின்றேன். தென்னிந்தியாவின் பண்ணைமுறை அடிமைவாழ்க்கையும் தென்னிந்தியாவின் இராமநாதபுரம், திருச்சிராப்புள்ளி உட்பட்ட பல்வேறு இடங்களையும் மிகவும் தாக்கிய பஞ் சமானது மனித இருப்பை மனிதவளத்தை வெளிநோக்கித் தள்ளியது. மக்கள் வயிற்றுப் பிழைப்புக்காகவும் எங்கேயாவது தொழில் தேடிப் புறப்படலாம் என்ற மன நிலையை இவ் சந்தர்ப்பத்தை மிகவும் லாவகமாக ஏற்கனவே தென்னிந்தியாவை முற்றுகையிட்டிருந்த ஐரோப்பியருக்கு கையில் அல்வா கிடைத்தது போலிருந்தது. கரும்புத் தின்ன கைக் கூலி வேண்டுமா?

அவர்கள் மலேசியா பிஜித்தீவுகள் தென்னாபிரிக்கா இலங்கை நாடுகளுக்கும் தொழிலாளர் களை மிகமிக மலிவான கூலிக்காகக் தழிழ் தரகர்கள் மூலமாக பசப்பு வார்த்தைகளை அம்மக்களிடம் கூறி அவர்களை கொண்டு வந்தனர். இங்கே வந்தப் பின்னர்தான் 'வந்து பாருடா வழுக்கை பாறை" என்ற நிலையை அவர்கள் கண்டனர். பிரித்தானியர், அவர்களை கொண்டு காடுகளை வெட்டி தேயிலையை பயிரிட்டனர். இது ஒரு நீண்ட வரலாறு. பின்னர், இந்த வரலாற்றை நான் புள்ளிவிபர அடிப்படையில் அவர்கள் பட்ட துன்பங்களை எப்படி அரசினால் அவர்கள் பழிவாங்கப்பட்டு பிரஜா உரிமை பறிக்கப்பட்டு நாடற்றவர்களாக

மாற்றினார்கள் என்பதையும் எழுதுவேன்.

இப்போது அங்கிருந்த வந்த எமது நான்கு தலைமுறை மக்கள் இன்றும் மலையகப் பெருந்தோட்டங்களில் வாழ்ந்து வருகின்றார்கள் அவர்கள் ஜீவனோபாயக் தொழிலாக இந்த தேயிலை செடிகளேக் காணப்படுகின்றது.

**மலையகப் பெண் தொழிலாள்கள்**

பெருந்தோட்டங்களில் அதிகமாக வேலை செய்வது பெண் தொழிலாளர்களே. அவர்களுக்கு நாட்கூலி அடிப்படையில்தான் சம்பளம் வழங்கப் படுகின்றது. எவ்விதமான மாதச்சம்பளம் அடிப்படையுமின்றி அவர்கள் பறிக்கும் கொழுந்தின் நிறையை கணித்தே அவர்களின் தின கூலி நிர்ணயிக்கப்படுகின்றது. குறைந்தக் கூலியில் நிறைய வருமானத்தை ஈட்டும் வகையில் பெருந்தோட்டப் பெண்களை பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

இப்படியாக சதா உழைக்கும் வர்க்கமான இப் பெருந்தோட்டப் பெண்கள் கல்வியறிவற்றவர் களாகவும் அவர்களை இவ் தோட்டங்களில் அன்றிலிருந்து இன்றுவரை கொழுந்தெடுக்கும் மனித இயந்திரங்களாக வைத்துள்ளார்கள். கொழுந்துப் பறிக்க எவ்விதமான கல்வித் தகைமைகளும் அவசியமில்லையென்பதாலேயே அவர்களுக்கு கற்றலுக்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. எனது தாயார் தரம் 02 ம் ஆண்டு கல்விக் கற்கும் போது வெறும் 10 சதத்துக்கு தேயிலைக்காடுகளில் படரும் புல்லுகளை வெட்டவதற்க்காக போனவர் .அப்போது குழந்தை தொழிலாளர்களையும் களை எடுக்க கொழந்து பைகளை சுமந்து வர உள் வாங்கப்பட்டவாகளில் எனது தாயாரும் ஆவார்.

நான் மலையகத்தில் பிறந்த வளர்ந்த அந்த சமூகத்தைப் பற்றி நன்கறிந்தவர் என்ற அடிப்படையில் மலையகப் பெண் தொழிலாளர் களுக்கு அதிகமான பிரச்சனைகள் சுகாதார ரீதியில் காணப்படுவதை நன்கறிந்திருக்கிறேன். அவர்கள் பலவிதமான அசௌகரியங்களுடன் பெருந்தோட்டங்களில் வேலை செய்கிறார்கள். ஆனால், இந்த விடயத்தைபபற்றி யாரும் சிந்திப்பதே இல்லை. மலையகத்தை மூடு பனி சுழ்ந்திருக்கும் அழகைத்தான் மாறி மாறி பகைப்படமெடுத்தும் ரசித்துவிட்டு மக்கள் கடந்து போகிறார்கள். ஆனால், மூடுப்பனிக்குள் எத்தனை துன்பம் உறைந்துக் கிடக்கின்றது என்பதை யாரும் அறிவதில்லையே. அந்தத்



துயர்களை உங்கள் முன் கொண்டு வரவே இக் கட்டுரை தேவையாகிறது.

மலையகத்தில் தொழில் செய்யும் பெண் களுக்கு மாதவிடாய் காலங்களில் பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படுகின்றது. முறையான சுகாதார கின்களை (Wishper) அவர்கள் பாவிப்பதில்லை. வெறும் துண்டுதுணிகளை பாவிக்கிறார்கள். இதனால் அவர்கள் நீண்ட நேரம் தேயிலை மலைகளில் கொழுந்தெடுக்கும் போது அவற்றை அடிக்கடி மாற்ற இயலாமல் போகும் நிலை காணப்படுகின்றது. அங்கே, அதற்கான மலசலக் கூட நீர் வசதிகள் முறையாக இல்லை. அதிகாலை 7.30 மணிக்கு கொழுந்தெடுக்க சென்றால் மத்தியானம் 12.30 மணிக்கு வந்து பின்னர் மாலை 05.30 மணிக்கு வீட்டுக்கு வருகிறார்கள்..

இந்நிலையில் அவர்கள் துணித்துண்டகளைப் பாவிப்பதால் அவர்களுக்கு மிகுந்த அசௌகரியம் உருவாகின்றது. இதனை நான் பலரிடம் நேரடியாக அறிந்துளளேன். துண்டு துணிகள் பாவிப்பதனால் பல்வேறு சுகாதார சீர்கேடுகள் இருப்பதாக 2007ம் ஆண்டு BBC உலகசேவை இந்தியாவில் மேற்கொண்ட ஆய்வின் மூலம் தெரிவித்தது.

இவ்வாய்வில்:

1. துண்டு துணிகள் பாவிப்பதால் அதிகமான இரத்தப் போக்கை அடையாளம் காணமுடிவதில்லை.

2. துண்டு துணிகள் ஆரோக்கியமற்றவை.

3. ஆரோக்கியமற்ற துண்டு துணிகளால் வெகு சிக்கிரமாக கர்ப்பவாசல் புற்றுநோய் உருவாகுகின்றது.

4. அவைகளை நீண்ட நேரம் பாவிப்பதால் எரிச்சலும் தொடர்ச்சியான உராய்வினால் தோல் உரிவதுடன் புண்களும் சதைகளில் பகுதியில் உருவாகின்றது.

இந்த ஆய்வு உண்மையில் மிகவும் மிகவும் வரவேற்கத்தக்கதாகும். அனேக வயது வந்தவர்களும் இளம் பெண்களும் துண்டு துணிகளால் அவதிப்படுகின்றார்கள். இதனை சுட்டிக்காட்டிய ஙிஙிசி அவர்களுக்கு இலவசமாக நப்கீன்களையும் சுகாதார துவாலைகளையும் வழங்க வேண்டும் என மாநகராட்சிகளுக்கு வேண்டுகோள் ஒன்றை வெளி யிட்டது.

ஆரோக்கிய துவாலைகளின் விலையானது 100 ருபாய் தொடங்கி 500 ருபாவரை விற்பனை செய்யபப்டுகின்றது. (இலங்கையில்) தரமான பெரிய whisper நப்கீனின் விலையானது 440 ஆகும். பெண் தொழிலாளர்களின் நாட்கூலியே 650 ருபாவாகும். அவர்கள் எப்படி ஒவ்வொரு மாதமும் 100 ருபா தொடங்கி 440 வரை மாதவிடாய்க்கான நப்கீன்களை வாங்க முடியும்? இது மலையகத்தில் தொழில் புரியும் பெண்கள் எதிர்நோக்கியுள்ளனர்.

மேலும் 40 - 45 வயதை ஒத்த பெண்கள் தொடர்ச்சியாக இரத்தப்போக்கை கொண்டுள்ளனர். இவர்கள்இதற்காககைவைத்தியங்களையும்மருத்தவ செலவுகளையும் செய்து பயனற்றவேளையில் அரசாங்க வைத்தியசாலைகளில் சிகிச்சைப்பெற்று பின்னர் கர்ப்பப்பையை எடுத்து விடுகிறார்கள்.

காரணம், அவர்கள் அதிகமாக சுமை சுமப்பதால் குறைந்தது 20 லீரீ முதல் 50 லீரீ வரை கொழந்தை தலையில் சுமக்கிறார்கள். மேலும் கொழுந்து மட்டுமல்ல கொழுந்தப் பறித்த பின்னர் வீடுகளுக்கு திரும்பும்போது விறகையும் சுமந்த வருகிறார்கள். இன்றுவரை அவர்கள் எரிபொருளாக விறகைப் பாவிக்கிறார்கள். இதனால் தானாகவே இவர்களுக்கு கர்பப்பை இறங்கி விடுகின்றமைக் குறிப்பிடத்தக்கது.

## ‘‘தாயும் சேயும்’’

**மூச்சு விட மறந்து**
**மோதி கொள்ளும் மூக்கின்**
**நடுவே முத்தமிடுகிறது**
**தாயின் அன்பும்**
**சேயின் சுவாசமும்...**

**– கீர்த்தனா**



(தகவல்: நேரடி கள உரையாடல் களப் பெண்கள்)

மேலும், மலையகப் பெருந்தோட்டப் பெண்கள் மாதவிடாய்க் காலங்களில் பயன் படுத்தும் இந்த நப்கீன்களை இப்போது ஓரளவு அறிந்து வைத்துள்ளார்கள். எனது தாயார் காலத்து தலைமுறை இந்த நப்கீன்கள் சுத்தமாக அறிந்திராவிட்டாலும் இன்றைய மலையகப் பெண்கள் “கொட்டஸ்” என்றப்பெயரில் இதனைப் ஓரளவுப் பாவிக்கிறார்கள். மேலும் பலர் இதனைப் பாவிப்பதில் தயக்கம் காட்டுகின்றனர். காரணம்... மூடநம்பிக்கைகள் இடையில் பாயைப் போட்டு படுத்து விடுகின்றது. கொட்டஸ் பாவிப்பதால் தங்களுக்கு பேய்பிடிக்குமாம். பேய்க்கு இரத்தம் பிடிக்குமாம். இப்படிச்சொல்லி அதிகமானப் பெண்கள் கொட்டஸ் பாவிப்பதை தவிர்த்துக் கொள்கிறார்கள்.

பேய் பிடித்தாலும் பரவாயில்லை, இந்தக் கொட்டஸ்களை சுகாதார முறையில் அகற்றுவது என்பதும் இன்னுமொரு சவால்மிக்க விடயமாகும். மரக்கறி தோட்டங்களிலும் புதைக்க முடியாது. ஏனெனில் மரக்கறிகளும் மரங்களும் பட்டு போய்விடும் என்பார்கள் குறிப்பாக கறிவேப்பிலை மரத்துக்கும் கத்தரிக்காவுக்குமே ஆபத்து . ஆகவே அவர்கள் இந்த கொட்டஸ்களை எங்கு புதைப்பது அகற்றுவது? கொட்டஸ்களை எரிக்கவும் முடியாது. காரணம், இரத்ததை எரித்தால் காட்டேறி பிடிக்கும் என்பார்கள். இத்தனை சவால்களையும் தாண்டி அவர்கள் இதனை பாவிக்கத்தான் வேண்டுமா? இந்த ‘கொட்டஸ்’ இத்தனை சமாச்சாரங்கள் நிறைந்திருப்பது எத்தனை பெரிய ஆச்சர்யம் என்பது மலையகத்தில் பெய்யும் ஓயாத மழையாய் தொடர்கின்றது.

நம்எல்லோருக்கும்தெரியும். பெண்மாணவிகள் பயன்படுத்தும் கழிப்பறைக்கோ அல்லது பொது இடத்தில் இருக்கும் கழிப்பிட்த்துக்கோ சென்றால் ஆங்காங்கே கிடக்கும் இரத்தம் தோய்ந்த நப்கீன்களை காணும் போது சட்டென்று அருவருப்பு முகத்தில் வந்து முக்காடு போட்டுக் கொள்ளும். இரத்தவாடைக் கொண்ட அவைகளை யார்தான் விரும்புவர்? ஆகவே மலையகப் பெண்கள் இதனை எப்படி சமாளிப்பது? மிகவும் குறுகிய லயத்திலும் மலசலக்கூட வசதிகள் அற்ற பிரதேசத்தில் அவற்றை சிரமமாக அகற்ற போராட வேண்டியுள்ளது. கழிவகற்றல் முறையானது சவால்மிக்க இன்னுமொரு விடயம் மலையகத்தில். அத்தோடு சூழலியல் பிரச்சனையுமாகும்.

இதனாலேயே மலையகப் பெண்கள் தண்ணி யோடு தண்ணியாக கழுவிப் போகும் இரத்தக் கறைகளை துண்டு துணி பாவிப்பதன் மூலம் கழுவிடவே விரும்புகிறார்கள். ஏனோ அதுவே அவர்களுக்கு பழக்கப்பட்ட விடயம் அனுபவமாகவே மாறிப்போய்விட்டது. ஆகவே, அதில் மாற்றம் கொண்டு வர வேண்டும் எனில் நேர்த்தியான விழிப்புணர்வும் நடைமுறை சாத்தியமாவதற்கு சில காலங்களும் தேவைப்படுகின்றது.

கவிஞர் ஜுனைட்.எம்.பஹ்த் எழுதிய

# முத்தொளி

**மீதான ரகசியப் பார்வை.**

**எம்.ரி.எம்.யூனுஸ் – காத்தநகரான்**




*கவிஞர்களை யாரும் உருவாக்குவதில்லை, அவர்களாகவே முளைத்து வேரூன்றி பெரும் மரமாகி வளர்கிறார்கள். அந்தவகையில் காத்தான்குடியிலிருந்து தன்னை கவிஞனாக அடையாளப்படுத்த துணிகின்றார் காத்தவூர்க் கவி ஜுனைட் எம்.பஹ்த்.*

*அண்மையில் காத்தவூர்க்கவி எழுதிய "முத்தொளி" கவிதைத் தொகுப்பு பிரசவம் நடந்தேறியது. வாசிப்புக்காக கிளர்த்திய போது என்னை சில வரிகள் ஆக்கிரமித்து வானின் உச்சிக்கே இழுத்துச் சென்றது.*

*கருத்தரித்த வானம் (பக் – 25)*

**...**<br>
**வெளித்த வானமாய்**<br>
**வெறிகொண்ட கதிரவனின் ஆட்சியில்**<br>
**அடிமையாய் கருகிப் போன**<br>
**பச்சைப் பசுமை....**

*என்ற வரிகளில் கவிஞன் எதையோ சூட்சுமமாய் கடத்திச் செல்கிறான்.. இன்று நாட்டில் நடந்தேறுகின்ற சுரண்டுதலை கொழுத்த ஆடுகள் மேய்வதை சூரியனுக்கும் பச்சையத்துக்கும் ஒப்புவித்து கலப்படமாக்கி இருக்கிறான் கவிஞன்.*

*நாகரீகம் உட்புகுந்த மானிடம் (பக் - 29)*

**...**<br>
**பாசமாய் பேசி மகிழ்ந்தவன்**<br>
**முகநூலில் முகம் இழிக்கிறான்...**

*என்ற வார்த்தைகளில் இன்றைய நவீன சூழலில் சமூகம் சிக்குண்டு கிடக்கும் பாதகத்தை அச்சொட்டாய் படம்பிடித்து காட்டுகிறார் கவிஞர் பஹ்த்.*

*காதல் மொழி பேசாத கவிஞர்களே இல்லை. கவிதையானது காதலிலும், நேசிப்பிலும், பிடிப்பிலுமிருந்துதானே உயிர்த்தெழுகிறது. அந்தவகையில் கவிஞன் தனக்குள்ளே அல்லது மாற்று சூழலிலே நடந்தேறிய அனுபவப் பகிர்வுகளை அல்லது கனவுகளை, நிஜங்களை அறுவடை செய்திருக்கிறான். "மை தீட்டிய ஏவுகணை" (பக் - 33) ஆள் தூது விட்டிருக்கிறான். கடந்த கால நடப்பை அல்லது அனுபவத்தை உள்ளதை உள்ளவாறே ஒப்புவித்திருக்கிறான். அந்தவகையில் இப்படி கிறுக்கி இருக்கிறான் பஹ்த்*

**...**<br>
**எவ்வலி கொண்டாலும்**<br>
**உன் விழி நினைத்து**<br>
**நிலத்திற்கு அடியிலேனும்**<br>
**உரமாய் காத்திருப்பேன்**<br>
**உன் உயிர் வாழும் வரை....**

*என காத்திருப்பின் அவஸ்த்தைகளை வலிகளை விட்டுக்கொடுப்பை வார்த்தைகளால் லாவகப்படுத்தி தன் எண்ணப்பாட்டை "இனியவளே" (பக் – 34) கவிதையிலும் வெளிப்படுத்தியதோடு காதலுக்காகவே பல கீறல்களை கீறியுள்ளான்.*

*"என்ன குற்றம் செய்தோம்" (பக் – 44) சர்வதேசத்தின் பக்கம் தன் பார்வையை செலுத்தி மியன்மார் முஸ்லிம்கள் படும் வேதனைகளை கஸ்டங்களை வாசகனிடம் ஒப்புவிக்கின்றார் கவிஞர்.*

...

**என்ன தவறு செய்தோம்**
**அடி நெஞ்சில் அல்லாஹ்வை சுமந்தோம்**
**இஸ்லாத்தை இதயத்தில் சுமந்தோம்**
**கலிமாவை நாவில் சுமந்தோம்**
**அதற்காக கொன்று குவிக்கிறார்கள்...**

*என முஸ்லிம்களுக்கு நடந்தேறுகின்ற அட்டூழியத்தனத்தை அப்படியே மனக்கண் முன்னே கொண்டு வருகிறான்.*

*மீண்டும் சிரியாவின் பக்கம் தன் அகளப் பார்வையை விரித்து "சிரியா (சிங்கார) தேசம் (பக் – 53) கவிதையில்*

...

**என் தேசம் முழுவதும் இரத்த ஏரி**
**அதன் மேல் பயணம் செய்யும்**
**மனித நரிகள்....**

*என சிரியா மண்ணில் நடக்கின்ற வக்கிரத் தனங்களை அநியாயங்களை வார்த்தைகளால் வடித்தெடுக்கின்றான் கவிஞன் பஹ்த்.*

*மனிதனின் நிலையாமையை பயணம் (பக் – 64) மற்றும் மரணம் (பக் – 65) எனும் கவிதைகளோடு ஒப்பு நோக்கிப் பார்க்கையில் போட்டிகளும் பொறாமைகளும் மனிதனை ஏதோவொரு வகையில் பாதகத்துள் தள்ளி விடுமென சாட்சியம் செய்கிறான் கவிஞன்.*

*பயணம் (பக் – 64)*

...

**நிரந்தரமில்லாப் பயணத்தில்**
**பேராசை கொண்டு பேயாக**
**அலைகிறான் மனிதன்...**

*மரணம் (பக் – 65)*

...

**இஷ்டம் போல் வாழ்ந்தேன்**
**கஷ்டமரியாமல்**
**பெருமையாக வாழ்ந்தேன்**
**பேராசைக்காரன் என்ற பெயரில்**
**புகழோடு வாழ்ந்தேன் பொய்க்காரனாய்**
**இத்தனை வாழ்விலிருந்தும் இன்பம்**
**ஏதுமில்லை இவ்வுலகில்**
**ஓடிவிட முயல்கிறேன் மரணம்**
**என்னை அணைப்பதற்குள்...**

*என நிரந்தரமில்லா மனித வாழ்க்கையை வாழ்தல் மீதான வெறுப்பை மனிதன் கொண்டுள்ள பேராசைத்தனத்தை பதிய மிடுகின்றான்.*

*பட்டினிச் சாவு (பக் – 72)*

...

**பசியில் வாடும் பிஞ்சு மலர்கள்**
**என் நெஞ்சை நஞ்சிட்டு**
**கொல்கிறது கண்ணீராய்**

**பசியில் மடியும் உயிர்**
**பட்டினிச் சாவு அல்ல**
**பணக்காரனின் கொலை....**

*என இன்று நடந்தேறுகின்ற அவல நிலையை சித்தரிக்கின்றார் பஹ்த்.*

*கவிஞனின் மனசு எப்போதுமே அநீதிகளை கண்டு கொதித்தெழுவதும், பாசத்திற்காக ஏங்கித் தவிப்பதும், அன்பொழுகப் பழகுவதும் கவிதைக்காரனுக்கு கிடைத்த பெரிய வரம். இதனை கவிஞர் பஹ்த்திடமும் காணலாம். இதனையே மேற்குறித்த கவிதையின் மூலமாக வெளிப்படுத்தியுள்ளார்.*




*அடிக்கடி ஆங்காங்கே தனக் குள் கொட்டுண்டு கிடந்த வார்த்தைகளை கவிதை மொழியில் வசப்படுத்தாமல் எதையோ வரைந்து தள்ளியது போல சில கவிதைள் கிறுக்கப்பட்டிருப்பது பிரதியை வாசிக்கின்ற வாசகனை சில வேலை திசை திருப்புவதாக அரைவாசிக்குற்பட்ட கவிதைகள்*

அமைந்துள்ளது. சொல்ல வந்த விசயத்தை அல்லது கருவை வேறொரு பக்கம் நகர்த்துவதாக சில வரிகளும், காட்சிப்படுத்த வேண்டிய படிமங்களை தூரப்படுத்தி கவிதையை இழுத்து வருவதும் பெரும் அவதியை ஏற்படுத்துகிறது.

நிறையவே ஆச்சரியக் குறியை கையாண்டு கவிதையை முடிவுறு நிலைக்கு தள்ளுவதும் படிமக் கையாளுகை அல்லது கவிதைக்குள் பொடி வைக்கும் நிலைப்பாடு தவிடுபொடியாகியுள்ளது சில கவிதைகளில் இதுவும் இந்த பிரதி மீதான நிலைப்பாட்டை தூக்கி வைக்ன்றது.

முத்தொளி கவிதைப் பிரதியில் 55 கவிதைகள் பின்னப்பட்டிருந்தாலும் சராசரியாக அரைக்கு அரைவாசி ஒற்றைக் கருத்தை விதைப்பதாகவே உள்ளது. கவிஞர் எடுத்த எடுப்பிலேயே ஆறுஓட்டங்களை விலாசித்தள்ளி விட வேண்டுமென எத்தனித்திருக்கின்றார். இது கவிஞரின் எண்ணப்பாட்டை அல்லது கவிதையின் கருவை சிதைத்து வைப்பதோடு கவிதையின் யுக்திகளை விட்டும் தள்ளி வைத்திருக்கிறது.

வருங்காலத்தில் கவிஞரின் தேர்ந்த வாசிப்பும், நல்ல சிந்தனைகளும் எதிர் காலத்தில் சிறந்த கவிதைகளை உருவாக்கவும், ஆரோக்கியமான நூல்களை உருவாக்கவும் உதவியாக இருக்குமென்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை. எது எப்படி அமைந்தாலும் இலக்கிய உலகில் கவிஞர் பஹத்தின் வருகையும் முத்தொளி கவிதைத் தொகுப்பு பிரசவமும் வரவேற்கத்தக்கதே.

நூல் பக்கங்கள் 80
விலை 300 இலங்கை ரூபாய்கள்

வெளியீடு

முஹாசபா நெட்வொர்க்
இல 24/2, சரிப்புரக்டர் லேன்,
காத்தான்குடி 02
இலங்கை

# பவகணேஷ் கவிதைகள்



கவிஞர் பவ. கணேசு இயற்கை ஆர்வலர். இவருடைய ஆறு கையடக்க நூல்கள் தொகுப்பாகவந்திருப்பதுசிறப்பு. இந்நூல்களை மிக எளிதாகப் படித்து கடந்துவிட முடியாது.

இவர் ஒரு மனிதாபிமானி. பூமியைத் தாயெனத்தான் அறிவோம். இவர் பூமியைக் குழந்தையாகவும் தன்னைத் தாயாகவும் உணர்ந்து, இப்பூமி எனும் குழந்தையை எப்படியாவது காப்பாற்றிவிட வேண்டுமெனத் துடிப்பவர். அத்தகைய துடிப்பு அவரின் கவிதைகளெங்கும் விரவிக் கிடக்கிறது.

பெருநதி அடித்துச் செல்கையில், கரையின் ஓரம் நின்று நீர்ப்பருகும் தன்மையது இவர் வாழ்வு. என்றாலும், அநித்திய உலகில் நித்தியங்களைத்தேடுபவர். இவரின் ஆறுகவிதை நூல்களும் சிறிய வடிவமைப்பில் இருப்பினும் உலகப் பெரும் பிரச்சனைகளையெலாம் எதிரொலிக்கும் நவகவிதைகள். குதிக்கும் கைக்குழந்தைகள், நச்சுச்சோறு, கொதிக்கும் பூமியென...

நூல்கள் தேவைக்கு தொடர்பு கொள்க...

email: ganeshprogress@gmail.com

பன்முகத் திறனாளி..

# சாரதா க. சந்தோஷ்

திரு. கண்ணன் ஜானகி ராமன் - திருமதி. ராஜலட்சுமியின்புதல்வியாகதிருநெல்வேலியில் பிறந்து, திருமயிலையில் வளர்ந்தவர்.

சிறு வயதிலிருந்தே... இயல், இசை, நாடகத்தில் ஆர்வம் அதிகம்..

பள்ளிகளில் எல்லாவிதமான போட்டிகளிலும் கலந்துக் கொண்டு வெற்றி பெற்றிருக்கிறார்.

மயிலை கஸ்தூரிபாய் சிறுவர் சங்கம் வாயிலாக ஒவ்வொரு வருடமும் சென்னை All India Radio வில் சிறார் நிகழ்ச்சிகளில் பங்கு பெற்றதுண்டு. கல்வியின் மேல் கொண்ட ஈடுபாட்டினால், வணிகவியலில் எம்.காம் பட்டம். மற்றும் எம்.பி.ஏ (மார்க்கெட்டிங்).. இந்தியில் பி.ஏ பட்டம் பெற்றவர்.

2002 ல் விசுவின் ஐதராபாத் அரட்டை அரங்கத்தில் 500க்கும் மேற்பட்ட பேச்சாளர்களில் 14 பேர் தேர்வு பெற்றதில் இவரும் ஒருவராகத் திகழ்ந்தவர்.



விமானப்படை வீரர் திரு. சந்தோஷ் மகாதேவனை மணந்து, இவர்களுக்கு அபிஷேக் எனும் செல்வ மகனுண்டு.

*சீதையின் வனவாசமாய் 14 வருடங்கள் வடக்கில் பல மாநிலங்களில் வாழ்ந்து...

சென்னை, புதுதில்லி, அஸ்ஸாமில் ஹோண்டா.. ஜி. எம்.. டாட்டா டீலர்களில் 15 வருடங்கள் பணி புரிந்து...1000 த்திற்கும் அதிகமான சிற்றுந்துகளை விற்று... பொது மேலாளராக பதவி உயர்வு பெற்று... மொழிகள் பல கற்று... சாதி மத பேதமின்றி மதநல்லிக்கணத்துடன் வாழ்ந்து வருபவர்.

தனது இதய தெய்வமாக திருமதி சங்கரி பாட்டியின் நினைவாய்...

சங்கரி கபே யெனும் பெயரில்... முகநூலில் காஷ்மீரம் முதல் கன்னியாகுமரி வரையிலான பல மாநிலங்களின் 250 உணவு வகைகளை ஆங்கிலத்தில் எழுதினார்.

இன்று ஐதராபாத் மாநகரத்தில், கூட்டுக் குடும்பத்தில் கூடி மகிழ்ந்து, இரண்டாண்டு காலமாக தமிழன்னையின் ஆசிப்படி.. இதயக்கனி புரட்சித் தலைவர்..எம்ஜிஆரின் நல்லாசியுடன் இலக்கிய உலகில் அடி யெடுத்து வைத்தவர்.

200 க்கும் மேற்பட்ட இணைய குழும போட்டிகளில் வெற்றி பெற்று, புதுக்கவிதை, குறுங்கவிதை., ஹைக்கூ.. பாடல்கள்,



மீ மொழி / நவீன கவிதை., ஒரு பக்க கதை, தமிழில் கசல், தன்முனைக் கவிதை யென ஆயிரத்திற்கும் மேற்பட்ட பல்சுவை கவிதைகளை எழுதியுள்ளார்.

ஒரு துளி கடல்.. (புதுக்கவிதைகள்)

மின் கம்பியில் குருவிகள் (ஹைக்கூ வகை)

இரு நூல்களை வெளியிட்டதுடன், உலகளாவிய 16 தொகுப்புகளில் தனது படைப்புகளைத் தந்துள்ளார்.

பல மின்னிதழ்கள், இலக்கிய இதழ்களில் எழுதியுள்ளார். இவரது படப்புகளை கவிஞர் தில் பாரதி தனது குரலில் “யூ ட்யூப்” ல் இவரது படைப்புகளை அரங்கேற்றியுள்ளார்.

HD கனடா வானொலியில் காதல் கவிதைகள் அரங்கேறி உள்ளன. (R J Jothy kumar)

மேலும் ஐதராபாத் raibow fm லும் ஹைக்கூ தினமன்று, இவரது சர்வதேச ஹைக்கூ வெற்றியை சிறப்பித்தார்கள்.. (R J Deepa)

சர்வதேச iaforhaikuaward.org நடத்திய ஆங்கில ஹைக்கூ போட்டியில் 71 நாடுகளிலிருந்து வந்த 700 ஹைக்கூக்களில் வெற்றி பெற்ற 20 ஹைக்கூ கவிஞர்களில் இவரும் ஒருத்தி என்பதில் பெருமிதமடைகிறார்..

சமீபத்தில் «மக்கள் டிவியில்» எழுத்தாளர் திரு. சீனிவாசன் இவரது இரு நூல்களையும் நூலாய்வு செய்து சிறப்பித்துள்ளார்.

மேலும், தமிழ் வளர்க்கும் முகநூல் குழுமங்கள் மற்றும் ஐதராபாத் மாநகர இலக்கிய வட்டங்களான..

«நிறை.»

«உரத்த சிந்தனை» ..

ஆகிய எழுத்தாளர் சங்கங்களின், தமிழ் நற்பணிகளிலும்... தொகுப்பாசிரியர், நடுவர், நிர்வாகம் போன்ற களப்பணியாற்றி இவரது நொடி முட்கள் நகர்கின்றன..

தமிழ் இலக்கிய கடலிலும், தமிழ் சமூகத்திலும் தான் ஒரு துளி என்பதாகச் சொல்லிக் கொள்கிறார்.

முயற்சியே வெற்றி என்பது இவரது தாரக மந்திரம்.. தனது தோழமைகளையும்.. இளைய தலைமுறையையும் ஊக்குவிப்பது இவருக்கு பிடித்த விடயம்..

தமிழ்நெஞ்சம் ஆசிரியர் குழு இவரிடமிருந்து இன்னும் நிறைய எதிர்ப்பார்க்கிறது.

வாழ்த்துகள்!



# மலர்களுக்கில்லை மனக்கசப்பு



“சார், உங்க பையனை கண்டிச்சு வைங்க. தேவையில்லாம எம்பையனோட எப்பப் பார்த்தாலும் சண்டை போட்டுட்ருக்கான்”

“யாரு? எம்பையனா? ஆரம்பிக்கிறதே உங்க பையன்தான். அவன மொதல தட்டி வைங்க”

“தேவையில்லாம எம்பையன் பக்கம் திருப்பாதிங்க, உங்க பையன் ஒழுங்கா இருந்தா எம்பையனால எந்தப் பிரச்சினையும் வராது.”

“பிரச்சினைபண்ற பையன வச்சுகிட்டு பெரிசா பேச வந்துட்டிங்க. பிள்ளைங்கன்னா ஒழுங்கா இருக்கணும். இருக்கற நல்ல பிள்ளைகளையும் கெடுக்கறது உம் பையன்தான்யா.”

“யோவ் மரியாதையா பேசு. இப்போதான் தெரியாது, உன்ன மாதிரித்தானே உம்பையனும் இருப்பான். சார்னு மரியாதையாப் பேசிட்ருக்கேன். வா போனு பேசற? சுத்த மரியாதை கெட்ட ஜென்மம்”

“அதிகமா பேசினே போலீஸ் கம்ளைன்ட் கொடுத்து உள்ள போட்ருவேன் பாத்துக்க”

“குடு, நானும் சும்மாவிடமாட்டேன்.”

“நிறுத்துங்க சார் ரெண்டு பேரும், யாருக்காக சண்டை போட்றீங்களோ அவங்க ரெண்டு பேரையும் பாருங்க அங்கே, சேர்ந்து வெளையாடிக்கிட்ருக்காங்க, கொஞ்ச நேரங்கழிச்சு சண்ட போட்டுக்குவாங்க, திரும்ப சேந்துக்குவாங்க. நீங்க ரெண்டு பேரும் சின்னப் பிள்ளைங்க மாதிரி சண்ட போட்றீங்க. தயவுசெய்து சின்னப்பிள்ளைகளோட சண்டைகளையெல்லாம் பெரிசுபடுத்தாதிங்க. அன்பா எடுத்து சொல்லுங்க, நிச்சயம் கேப்பாங்க”

அமைதியாகிப் போனார்கள் சின்னப் பிள்ளைகள்போல் சண்டை போட்ட அப்பாக்கள்.

**ஃபாத்திமா,**
ஷார்ஜா

- பாவத்தின் சம்பளம்

சருகாக கருகுகிறோம்
தகுதியில்லாஅரசமைக்க
பணம் வாங்கி ஓட்டளித்த
பாவத்தைசெய்ததினால்.

- கோடை

கோடைகால வகுப்புகள்
குளிர்வசதியுடன்ஆரம்பம்
கோமண துணிக்கேனும்
ஏங்கும் ஏழையிடை.

- பொருளாதார வீழ்ச்சி

நாகரீகத்தால்நசுங்கியது
இந்திய இறையாண்மை
ஏற்றுமதியை குறைத்து
இறக்குமதியை கூட்டி.

- தேடினேன் உயிரை

உழவனை தேடினேன்
உலகம் உய்ய
நிலங்களை அழித்த பின்
நீச புத்தியுடன் நான்

*பாலகிருட்டிணன் வண்ணமுத்து*

# நின் நினைவுகள்

நினைவுகளை கைபிடித்து
நிலவொளிதனை நனைத்து
நீண்ட தூரம் போகிறேன்.
நீயும் வருவாயென - நின்
நினைவுகள் சொல்லிவிட
நீயும் வருவாயா?
நிழல் கூட்டி
நிலாவின் முகம் காட்டி.

நிறுத்தும் இடமெல்லாம்
நினைவோடு இன்புற்று
நீயே இருப்பதுவாய்
நிகழ்வுகள் இனிக்குதடி.

நித்திரை கனவழியில்
நினைவெனும் நீர் அலையில்
நீந்தி நீந்தி நீர்த்துபோய்
நின்னொரு நினைவு கூட
நீங்காது கண்மணியே.

நித்தம் நித்தம் நீ வேண்டும்
நிரம்ப நிரம்ப நினைவு வேண்டும்
நீயாக தரவேண்டாம்
நினைத்து விடு பொன்மணியே.

நின்று கடுக்கையிலும்
நீள் தூரம் கடக்கையிலும்
நீட்டி நிமிர்ந்து கிடக்கையிலும்
நின் நினைவுகள் நெருடுதடி!!!

**ஜீவா**
கோயம்புத்தூர்

# உடையும் இதயம்

இரவல் வாங்கிய இதயம்
அது எத்தனை தரம் தான் உடையும்
கடனாய்த் தந்த கடவுள்
கண்டால் கண்ணீர் வடிப்பார்
அழகாய்ப் பேசிச் சிரித்தான்
அவனே உயிரில் கலந்தான்
இடையில் பிரிந்து சென்றான்
என் இதயம் நூறாய் உடைந்தது
மீண்டும் ஒருவனைக் கண்டேன்
அவன் பேச்சும் மெய்யென உணர்ந்தேன்
அம்மி மிதிக்க சொன்னான்
அருந்ததி பார்க்கச் சொன்னான்
இதயம் நிறைந்து நின்றான்
இருகரம் பற்றிக் கொண்டேன்
இறந்த காலக் கதையில்
பிரிந்த காதலைச் சொன்னேன்
அன்றிலிருந்து அவனும்
என் இதயம் உடைக்க தொடங்கினான்
எத்தனை தரம் தான் உடையும்
இரவல் வாங்கிய இதயம்.!!!

**ரத்னா**
திருநெல்வேலி!!!



பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

அக்டோபர் 2018

